சிலம்பு ௩௪	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௧, ஆடி. ஆகஸ்டு, 1960	பரல் ௧௨

ஆட்சிமொழி பொதுவாம் ஆங்கிலமே நன்று

ஒரு நாட்டிலுள்ள பல்வேறு மக்களையும் வேற்றுமை கொள்ளாது ஒற்றுமை கொள்ளச் செய்வது உயிரினுஞ் சிறந்த அந்நாட்டு மொழியே யாம். அந்நாடும், அந்நாட்டு மக்களும் அனைத்துலக மக்களாலும் அழைக்கப்படுவதும் அந்நாட்டு மொழிப் பெயராலே யாம். பொதுவாக உடலுறுப்புக்கள் பெரும் பாலும் ஒன்றாகக் காணப்படினும் ஒருவரைச் சிறப்பாக அறிந்து கொள்ளுவதற்கு அவர்தம் தனியுரிமையாகத் திகழ்வது அவர்தம் முகம் ஒன்றேயாம். அதுபோல் நாடுகள் பெரும்பாலும் நிலவளம், நீர்வளம், செல்வவளம், கல்விவளம், கலைவளம், ஒழுக்கவளம், ஆட்சிமுறை, உடல்வளம், உரனுடைமை, கடவுட் கொள்கை முதலியவற்றில் உடலுறுப்புக்கள் போன்று ஒப்புடையதாகக் காணப்படினும் முகம்போன்று தனியுரிமையாகக் காணப்படுவது அந்நாட்டு மொழியொன்றுமே யாம். அம்மொழியினுக்கு நேர்முகமாகவேனும், மறைமுகமாகவேனும் சிறு ஊறு விளையும் போல் தோன்றினும் உயிருக்குற்ற ஊறென உன்னி அதனைத் தடுப்பதற்கு அம்மொழிக்குரியாரனைவர்களும் மடிதற்று முந்துறுவர். அதன்பொருட்டு உடல் பொருள் ஆவி மூன்றனையும் ஒருங்கிழக்கவும் பின்னிடார். மறமானமிக்க அன்னார் இத்தகைய அறப்போரில் கலந்து செயலாற்றுவது கிடைத்தற்கரிய பெரும்பேறெனவுங் கொள்வர். கொண்டு உரங்கொண்டுழைப்பர். ஊறு நேரின் விழுப்புண் எனக்கொண்டு களிப்பர். உயிரீயநேரின் பிறவிப் பெரும்பயன் என்று நனிமிக மகிழ்ந்து இனிதினீவர்.

எல்லா நாட்டினும் மக்களுக்குள் வேற்றுமைக்கு வித்தாயிருப்பன செல்வம் வறுமை, கல்வி கல்லாமை, சாதி சமயம்,

ஏவுவோர் இயற்றுவோர் முதலுடையார். தொழிலாளர் ஆள்வோர் ஆளப்படுவோர் என்ப போன்றவைகளாகும். இவையனைத்தையும் கொள்ளவொட்டாது தள்ளி மேற்போந்து ஒற்றுமைப் படுத்துவது அந் நாட்டுத் தாய்மொழி யொன்றேயாம். தாயை இழந்த சேய் ஒருவாறு பிறரால் பேணப்பட்டேனும் வாழும். தாய்மொழியை இழந்த நாடு ஒருவாற்றானும் தன்னிலையில் வாழாது. வந்த மொழிக்கு அடிமையாய் அந்த மொழியை மேற்கொண்டு, தன்மொழியைத் தானே கொன்று பழிநிற்க வீழும். ஒரு நாட்டைக் கெடுக்க எண்ணுவார் முதற்கண் அந் நாட்டு மொழியைக் கெடுத்தல் வேண்டும் என்பது நன்றல்லார் கூறும் சூழ்ச்சிகளுள் ஒன்று. அவ்வுண்மை கடந்த பன்னூற்றாண்டுகளாக வேற்றுமொழியாளர் பரந்து பட்ட நம் பரத கண்டத்தை வல்லாட்சியால் ஆண்டு நாட்டு மொழிகளைக் கொல்லாமற் கொன்று குற்றுயிராக்கி முற்றடிமையாக முடித்தனரென்பதனால் நன்கு விளங்கும்.

கடைசியாக ஆண்ட ஆங்கிலேயரும் அங்ஙனமே செய்தனர். ...துதனால் நாட்டு மொழி எந்நிலையிலிருந்ததென்பது நாமெல்லாங் ...ண்கூடாகக் கண்ட பேருண்மையாகும். மொழியிழந்தமை ...ானே அடிமைகளாகவும் ஆக்கப்பட்டோம். சிலர் அவர்கள் போல் நடிக்கவுந் தலைப்பட்டனர். அங்ஙனந் தலைப்பட்டார் ஏனைத் தம் பிறப்பினராய மக்களையும் தம் தாய் மொழியாகிய நாட்டுமொழியையும் வேற்றுநாட்டவரினும் மிகக் கொடுமையாகப் புறக்கணித் தொதுக்கினர். அம்மட்டோ பலரறியப் பெரிய மேடைகளில் தமக்குத் தமிழில் பேசத் தெரியாதெனக் கூறிக் கொள்வதைக் கூசாது பாராட்டிப் பேசவுந் துணிந்தனர். இந்த இழிநிலை என்று மாறும்? அடிமைத்தளை எந்நாளறும்? உரிமை யாட்சி தொடங்கும் பொன்னாள் எந்நாள்? என மாந்தர் அனைவரும் எதிர்பார்த்தேங்கினர். பேரொறுத்தலுக்கும், பேரிழப்புக்கும் உட்பட்டனர். பல்லோர் உரமொடு உயிருமீந்தனர். காந்தியடிகளாரின் கணக்கிட வொண்ணு அரும்பெருழைப்பினால் நாட்டுக்கு உரிமை கிடைத்தது. அடிமைப் படுத்துங் கோனாட்சி யொழிந்து, உரிமை வழங்கும் குடியாட்சி வந்தது. எல்லாரும் அகமும் புறமும் அளவிலா இன்பமும் மகிழ்வுங் கொண்டனர்.

இந்த நிலைமையில் மீட்டும் இந்தி நுழைவும் இந்தித் திணிப்பும் ஏற்படத் தொடங்கிப் பல இன்னல்களை நாட்டுமக்களுக்கு நல்கின. அந்நாளில் கழகத்தார் பலவழியாலும் முன்னின்று எதிர்ப்பத் தூண்டியும், எதிர்ப்பார்க்குத் துணை புரிந்தும் எதிர்த்தும் வந்தனர்; வருகின்றனர்; வருவர். 23-11-36 'தமிழ் நாட்டுக்கு இந்தி வேண்டுமா?' என்னும் தலைப்புக்கொண்ட வெளியீடு ஒன்று

பெருமக்கட்கும், பொருவில் புலவர்கட்கும், கட்சித் தலைவர் கட்கும், ஆட்சித்துறை வல்லார்க்கும், பிறர்க்கும் விடுத்தனர். அவற்றை மனமார வரவேற்று விடையிறுக்கு முகத்தான் சான்றோர் பலரும் தத்தங் கருத்துக்களையும் ஒருங்கெழுதி யுள்ளனர். அவை எண்ணில. அவற்றுள் சில ஈண்டுக் கூறுதும்: அந்நாள் முதலமைச்சராகத் திகழ்ந்த திரு. இராசகோபாலாச் சாரியார், ஆ. அருள்தங்கையா, பண்டித. சி. த. நாராயணசாமி, லங்கேச்வரன், குளித்தலை கம்பர் செந்தமிழ்ச் சங்கம், சேலம் கோ. வேணுகோபால் நாயுடு, வித்துவான் ம. இராசமாணிக்கம் பி. ஓ. எல்., புதுவை. சுத்தானந்த பாரதியார், புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி சங்கம், வித்துவான் இ. சிவகுருநாதன், முகைதீன் கவிராயர் (United Theological College Bangalore) என்போ ராவர். மேலும் துண்டு வெளியீடாக வெளிவந்தன பல. அவற்றுட் சில: தமிழும் இந்தியும், ஹிந்திமொழிப் பயிற்சியா? என்பன.

ஆசிரியர் "மறைமலையடிகளார்" அவர்கள் அந்நாளில் இந்தி எதிர்ப்புக் கூட்டங்களில் தலைமை தாங்கி வன்மையாகக் காரணங் காட்டிக் கண்டித்தும் 'இந்தி பொது மொழியா' என்னும் நூல் வாயிலாக இந்தியின் தோற்றமும் அதன் வளமிலாத் தன்மையும், இலக்கண இலக்கியங்களில் ஏதுந் தோன்றாமையும், தூய இந்தி பேசு மக்களின் தொகைச் சுருக்கமும், வடநாட்டின்கண் இந்தி யினைப் பலரும் புரிந்துகொள்வர் எனப் புகலும் பொருத்தமில் உரையும், பிறவுந் தெளிவுறக் காட்டி விளக்கியுள்ளார்கள்.

ஏறத்தாழக் கால்நூற்றாண்டுகளாக நந்தமிழ் நாட்டில் இந்திப் போராட்டம் இருந்துகொண்டே யிருக்கிறதென்றால் ஆட்சியாளர் உண்மையோர்ந்து மாந்தர் குரலுக்கு மதிப்புக்கொடுத்துக் குடி யாட்சியின் நன்மையையும் மேன்மையையும் நாட்ட நாடாமையே அதற்கு ஏதுவாகும் எனப் பிறர் எண்ண இடமாகின்றது.

அண்மையில் குடியரசுத்தலைவர் திரு. இராசேந்திரப் பிரசாத் வெளியிட்ட கட்டளையில் 1965க்குப் பின் எல்லாத் துறைகளிலும் இந்தியே ஆட்சி மொழியாக இருக்கும், ஆங்கிலம் அகற்றப்பட்டு விடும் எனக் கூறியது நாட்டில் கிளர்ச்சிக்கு இடனாயிற்று.

குடியரசுத்தலைவர் 29-7-60இல் ஐதராபாத் உருது இலக் கியக் கழகத்தில் பேசியதன் சுருக்கம்: "ஒரு மொழி மற்றொரு மொழியிலிருந்து சொற்களை எடுத்துத் தாராளமாகக் கையாள ஆரம்பித்துவிட்டால் மொழிபற்றிய தகராறுகள் பெரும்பாலும் தீர்ந்துவிடும். இந்தி மொழியிலும் உருது மொழியிலும் போது மான அளவு சொற்கள் இருக்கின்றன. உருதுவும் இந்தியும் வெவ்வேறான மொழிகள் அல்ல. உருதுவுக்கும் இந்திக்கும் இலக்

கணம் ஒன்றே. உருது மொழியிலிருந்து அராபிய மொழிச் சொற்களையும் பர்சிய மொழிச் சொற்களையும், இந்தி மொழியிலிருந்து சமக்கிருதச் சொற்களையும் நீக்கிவிட்டுப் பார்த்தால் இரண்டும் ஒரே மொழி என்னும் உண்மை தோன்றும்.

அதுபோலவே மற்றொரு புதுமுறையையும் கையாளலாம். அஃதாவது இந்தியில் கலந்துள்ள சமக்கிருதச் சொற்களை உருது மொழியிலும் உருதுவில் கலந்துள்ள அராபிய, பர்சியச் சொற்களை இந்தியிலும் கலந்துவிட்டால் நல்ல பயனும் நன்மையும் விளையும்" என்பதே. இக்கருத்து நம் தமிழ் மொழியைப் பொறுத்தமட்டில் ஒருசிறிதும் பொருந்தாது. தனித்தியங்கும் ஆற்றலும், சொல்வளப் பெருக்கமும், புதிய சொற்களை வேண்டும் போதெல்லாம் படைத்துக்கொள்ளக்கூடிய இயற்கைப் பண்பும், தொன்மை முதலிய மேன்மையும் இல்லாத மொழிகளுக்குப் பொருந்துமேனும் அவையனைத்தும் ஒருங்குடைய தமிழ் மொழிக்கு எங்ஙனம் பொருந்தும்? குறைவிலாத் தமிழ்மொழியில் வேற்றுச் சொல் ஒன்று புகுமேனும் அச்சொல் முன் வழங்கி வந்த இயற்கைச்சொல் ஒன்றைக்கொன்றே நிலைக்கின்றது. தமிழின் இயற்கைத் தூய்மையுங் கெடுகின்றது. அதனால் தமிழ் பிறமொழிச் சொற்களைக் கடன்பெற இணங்குவது தற்கொலைக்கு ஒப்பாகின்றது. இதனை உன்னித்து விழிப்பாயிருக்க வேண்டுவது தமிழரின் பெருங் கடனாகின்றது.

வேண்டாத பன்மொழிச் சொற்கள் வந்து கலப்பதால் ஒரு மொழியின் தூய்மை கெடுவதுடன், அம்மொழியின் பண்பாடும், இயல்புங் கெட்டுப் புதுமொழியாக நின்றுவிடுகிறது. எடுத்துக்காட்டாக, பண்டு தமிழாகத் திகழ்ந்த மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு முதலியன முற்றும் மாறுபட்டு வேற்றுருவும், பெயரும் பெற்றுத் தோற்றமுறுகின்றன. இங்ஙனம் நேர்ந்த மாறுபாட்டால் ஒருகுலத் தமிழ்மக்கள் நாற்குலமாய் நண்ணார்போல் வாழ்வாராயினர். ஒரு மொழியில் வேற்றுமொழிச் சொற்கள் ஏராளமாகக் கலப்பதால் இருமொழியாகப் பிரிபட்டொழியும் என்னும் உண்மையினை இந்தியும் உருதும் வேறானமை விளக்கிய குடியரசுத் தலைவர் பேருரையா னுணரலாம். எனவே, எந்த மொழியும் தன்பாலில்லாத சொற்களையும் ஆக்க இயலாத சொற்களையும் கடன்பெறுதல் தவறாகாது. அங்ஙனமின்றி இருக்குஞ் சொல்லை விடுத்து வாளா வேற்றுமொழிச் சொற்கடன் பெறுதலும் ஆக்க முயலாது மடியராயிருக்கப் பெறுதலும் வெறுப்புக்கு இடமாகும். செந்தமிழ் மொழிக்கு இவ்விரு வகையான இடர்ப்பாடுகள் எந்த நாளிலும் நேர்வதற்கில்லாமை அதனுடைய தொன்மையும், இலக்கணஇலக்கிய வளஞ்சார் நன்மையுமாமென்க

இந்தியைப்பற்றி இயல்பாகவே நடுங்கிக்கொண்டிருக்கும் தமிழ் மக்கட்குப் பிரதமர் நேரு கூறும் உறுதிமொழியினை உறுதிப்படுத்தாத குடியரசுத் தலைவர் ஆணை மக்கள் மனத்தில் பெருங் குழப்பத்தினை உண்டாக்கிவிட்டது. அதனை நீக்கு முறையில் மத்தியப் பேரரசின் உள்நாட்டமைச்சர் திரு. பந்த் கூறியதன் சுருக்கம் வருமாறு:

"1965 ஆம் ஆண்டுக்குப் பின்னும் ஆங்கிலம் இணை ஆட்சி மொழியாக இருந்து வருமென்றும், இந்திய அரசாங்க வேலைகளில் சேர்வதற்கு இந்தி பேசாத பகுதியினர் இந்தி மொழியில் கட்டாயமாகத் தேறவேண்டிய அவசியமில்லையென்றும், தலைமையமைச்சர் உறுதிமொழி கொடுத்திருந்தார்." அதைப்பற்றி எழுந்த வினவில் திரு. பந்த் கூறிய விடையே வருமாறு:

"தலைமையமைச்சரின் வாக்குறுதியினின்றும் மாறுபடும் எண்ணம் சிறிதும் இல்லை. தலைமை அமைச்சர் அளித்த உறுதிமொழிகளுக்கு இணங்கவே அரசின் நடவடிக்கைகள் இருக்கு என்று குடியரசுத் தலைவர் உத்தரவில் தெள்ளத் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1965ஆம் ஆண்டுக்குப் பின்னரு ஆங்கிலம் நீடிக்கவேண்டுமெனத் திட்டவட்டமாகத் தீர்மானித்து விட்டோம். இதன் தொடர்பாக அரசியல் சட்டவிதி முறைகளுக்கு இணங்கச் சட்டவரைவு (மசோதா) ஒன்று பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படும். இந்தச் சட்டவரைவு நிச்சயமாக 1965ஆம் ஆண்டுக்குள் பாராளு மன்றத்தில் கொண்டுவரப்படும். இதில் எல்லா விவரங்களும் அடங்கியிருக்கும். இந்திய அரசு வேலைகளில் சேரவிரும்பும் இந்தி பேசாத பகுதியினர் இந்தித் தேர்வில் கட்டாயமாகத் தேரவேண்டுமென நிபந்தனை விதிக்கப்படவில்லை. சிறிது காலத்திற்குப் பிறகு இந்திய அரசு வேலையில்சேர்வோர்க்கு இந்திமொழித் தேர்வைக் கட்டாயமாக்கவேண்டுமென ஆட்சி மொழி பற்றிய பாராளு மன்றக்குழு பரிந்துரை செய்திருக்கிறது. ஆனால் அந்தப் பரிந்துரையை நாங்கள் ஏற்க மறுத்துவிட்டோம்"

குடியரசுத்தலைவர் டாக்டர் பிரசாத் அவர்கள் ஐதராபாத் இந்திப் பிரசார சபைப் பட்டமளிப்பு விழாவில் பேருரையாற்றிய போது குறிப்பிட்டதன் சுருக்கம்: "இந்தி மொழியை எவர் மீதும் ஒருபோதும் வலுக்கட்டாயமாகத் திணிக்கமாட்டோம்" என்பதே.

பாராளுமன்ற தி, மு. க. உறுப்பினர் திரு. ஈ. வெ. கி. சம்பத்துக்கு பண்டித நேரு அவர்கள் தந்த மறுமொழி வருமாறு:

"மொழிச் சிக்கலைக் குறித்து நான் அளித்த வாக்குறுதிகளை முழுக்க முழுக்க அப்படியே இந்திய அரசு நிறைவேற்றி

வைக்கும்” எனப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஈ. வெ. கி சம்பத்துக்கு எழுதியுள்ள தலைமை யமைச்சர் கடிதத்திற் கூறி யுள்ளார். ஆட்சிமொழி பற்றிக் குடியரசுத் தலைவர் பிறப்பித் துள்ள உத்தரவுத் தொடர்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களில் ஒருவரான திரு. சம்பத் தனிப்பட்ட முறையில் ஒரு கடிதம் எழுதியிருந்தார். இந்தக் கடிதத்திற்கு நேரு எழுதி யுள்ள பதில் கடிதத்தில் கூறிய விடையே மேற்குறித்ததும் வருவதுமாகும். “மொழிச் சிக்கலின் தொடர்பாக நான் அளித் துள்ள வாக்குறுதிகளினின்று இந்திய அரசு அணுவளவும் பிறழாது. மொழிச்சிக்கல் குறித்து மக்கள் சபையில் நான் அளித்துள்ள உறுதிமொழிகளுக்கு முரணாக ஒருபோதும் இந்திய அரசு நடந்ததில்லை. குடியரசுத்தலைவர் உத்தரவில் என் வாக்குறுதிகள்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதையே இரண்டு நாட்களுக்கு முன்னர் உள்நாட்டமைச்சர் மக்கள் சபை யில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். சென்னை நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியமும் இதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். ஆகவே இச்சிக்கல் குறித்து ஏன் தவறான கருத்துத் தோன்றி யிருக்கிறதென்பது எனக்கு விளங்கவில்லை. பழைய வாக்குறுதி களுக்கிணங்கவே நாங்கள் நடந்து வருகிறோம். நமது குடியரசுத் தலைவரை அவமதிக்கும் முறையில் உங்கள் கட்சி (தி. மு. க.) நடந்துகொள்வது மிகவும் வருந்துதற்குரியது” என்பதே.

மேற்கண்ட மறுமொழி வருவதற்கு வாயிலாகப் பாராளு மன்ற உறுப்பினர் பதினைவர் கைச்சாத்திட்ட கடிதம் ஒன்று திரு. நேரு அவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது. அது வருமாறு:

திரு. என். சிவராசு (குடியரசுக் கட்சி), ஈ. வெ. கே. சம்பத், ஆர். தர்மலிங்கம் (தி. மு- க.), டாக்டர் ஏ. கிருட்டிணசாமி (சுயே), முகம்மது இமாம், பி. ஆர். ஜே. கோயாங்கர், என். பி. சண்முகக் கவுண்டர், எம். எஸ். சுகந்தி, ஹெம்பருவா, பி. ஜே. கெயிக்வாட், பி. சி. கேம்பிள், டி. ஏ. கட்டி, கமால்சிங், ஜெய் பால்சிங், என். சி. பரூச்சா ஆகிய பதினைவர். “ஆட்சிமொழி உத்தரவில் நேருவின் வாக்குறுதி பற்றித் தெளிவான குறிப்பு இல்லாவிட்டால் பல்வேறு அமைச்சுத் துறைகளும், அரசுத் துறைகளும் ஆட்சிமொழிச் சிக்கல் குறித்துத் தங்கள் தங்கள் மனம் போனபடி நடக்க வழி ஏற்படும். இந்த அச்சத்தைப் போக்க மக்கள் சபையில் தாம் அளித்த வாக்குறுதிகளை மீண்டும் வலியுறுத்தித் தலைமை யமைச்சர் ஓர் அறிக்கை வெளியிடுதல் வேண்டும். 1965ஆம் ஆண்டிற்குப் பிறகும் தேவையான காலம் வரை ஆட்சிமொழியாக ஆங்கிலத்தைத் தொடர்ந்து பயன்படுத்த வழிசெய்யும் சட்டம் ஒன்றைப் பாராளு மன்றத்தில் கொண்டு

வருதல் வேண்டும். ஆட்சி மொழியில் மாறுதல் செய்வதுபற்றி முடிவு செய்வதில் இந்தி பேசாத மக்களின் குரலுக்கு முதலிடங் கொடுத்தல் வேண்டும். இந்த நடவடிக்கைகள் எடுக்கப் படுமானல் நாட்டு மக்களிடையே ஒற்றுமைக்கு வழி ஏற்படும். அத்துடன் குடியரசுத் தலைவரின் சென்னை மாகாணச் சுற்றுச் செலவில் விரும்பத்தகாத நடவாமல் தடுக்கமுடியும்" என்பதே.

இதுகாறுங் கூறியவாற்றால் விரிந்த நம் பரத கண்டத்தில் பதினான்கு மொழிகள் ஆட்சி மொழியாம் ஆக்கமுடைத்தென வரையறுக்கப்பட்டவற்றுள் ஒன்றாகிய இந்தி மொழிக்குத் தனிப் பெருமை வருவது எங்ஙனம் என ஏனையார் எண்ண நேர்வது இயல்பே. ஒரு மொழி பெரும்பான்மையோரால் பேசப்படுவதென வைத்துக்கொண்டாலும் ஏனைய மொழியாளர்களின் தொகையை நோக்கும்போது அப் பெரும்பான்மை மிக மிகச் சுருங்கிய சிறுபான்மையாகிவிடும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று. மேலும் அம்மொழியாளர்கட்குத் தங்கள் மொழி ஆட்சி முதன்மை பெற்று வீறுகொண்டுள்ளதெனத் தருக்குண்டாவதற்கு ஏதுவுமாகும். ஏனைமொழியாளர்கட்கு நம்முடைய மொழி ஆட்சி முதன்மை பெறவில்லையே என ஏங்குதற்கும் இடனுண்டாவதும் இயற்கையாகும். இவை அனைத்தும் எளிதின் அகன்றொழிதற்கும், அனைவரும் உவப்புடன் ஏற்று ஒழுகுவதற்கும் துணை ஆட்சி மொழியாக இருத்தல்வேண்டுமென வரையறுக்கப்பட்டுள்ள ஆங்கிலமே ஆட்சிப் பொதுமொழியாக அமைத்துக்கொள்வது சாலச் சிறந்ததாகும் எனக் கருதுதல் எல்லார்க்கும் ஏற்புடைத்தாம். மேலும் ஆங்கிலம் உலகப் பொது மொழியாகவுந் திகழ்கின்றது. நூல்வளமிக்கது. நம் பரத கண்டத்தில் உரிமை வேட்கை எழுப்பிப் பெறத் தளராதுழைத்த தலைவர்கள் ஒருவரோடொருவர் அளவளாவத் துணைநின்றதும் மக்கட்குள் அவ்வுணர்ச்சியை யெழுப்ப முன்னின்றதும் அவ்வாங்கிலமேயாம். இப்பொழுதும் நம் பரத கண்டத்திற்கு உலகத் தொடர்பிற்கு உறுதுணையாக நிற்பதும் அதுவே. மாநிலக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள்கையாள்வதும் அதுவே. கற்று வல்ல பலரும் அம்மொழியிலேயே சிறந்திருக்கின்றனர். அதுவே மேலும் கற்பதற்கும் எளிதாக இருக்கும். இத்தகைய சிறந்த காரணங்களால் பேரரசினர் ஒவ்வொரு மாநிலத்தும் ஆட்சிமொழியும் பல்கலை கற்பிக்கு மொழியும், முறைமன்ற மொழியும் பிறவும் அவ்வம் மாநில மொழியாகவே இருத்தல் வேண்டுமெனவும், பொது ஆட்சி மொழி ஆங்கிலமாக இருத்தல் வேண்டுமெனவும் ஆணையிடுவரேல் அது பொருத்தமுடையாமெனத் தெரிவித்து அங்ஙனம் செய்யுமாறு வேண்டிக் கொள்கின்றேம்.

---

*தூயோன்

[வித்துவான். நெல்லை. க. சுப்பிரமணியன்]

தூயோன் என்பான் அகமும் புறமுந்
தூய்மையால் திகழும் வாழ்க்கையன் ஆவான்
பயனிலா நினைவும் பண்பிலாச் செயலும்
மறந்தும் அவன்பால் மருவுதல் இலவே.
நில்லா வுலகில் நீத்தவன், அறவோன்,
'அல்லல் நீத்த உவகை'யின் வாழ்வான்
அறிவுசேர் நெஞ்சிற் குறிக்கோள் கொண்டு
வறிதிடர்ப் படாது வாழ்குவன் அமைந்தே.
அரண்மனை வாழ்வும் படைஞரின் காப்பும்
ஈண்டிவ் வுலகில் வேண்டிலன் மாதோ!
கொடுமையின் இடியொலி கேட்டுநனி நடுங்கி
உய்ந்துசெல் வழியும் நாடுதல் இலனே.
வாழ்க்கையில் எதிர்ப்படுந் துயரெலாங் காணின்
'நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே' ஆனால்,
ஏனோர்க் கெல்லாம் இவ்வள வாயினும்
துகளறு சிறப்பின் தூயோற் கிலவே.
அதிர்வின்றி அவன்விழி ஒளிமிகுந் திருக்கும்
வினையின் விளை வாகிய வேதனை எண்ணித்
தினையின் அளவும் கலங்கித் திரியான்.
இடரெலாங் கண்டவன் ஏளனஞ் செய்குவன்
அவற்கு,
மேன்மையாம் நினைவே மேதகு நண்பன்
தான்பிறர்க் கெல்லாம் வாழ்ந்துகட னாற்றிய
பயனுறு நாட்களே பழியிலாச் செல்வம்
உயர்நிலை உலகத்து உறையுள்வேட் டதனால்
அஃதவன் பயிலும் அரும்பெரு நூலாம்;
அதற்குரிய நெறியே அவன்மெய் யுணர்வாம்
வான்றமிழ்ப் பண்பின் தூயோன் ஆதலின்
'ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோன் ஆயினன்' வாழ்குவன் சிறந்தே.

---

* THE UPRIGHT MAN என்னும் ஆங்கிலப் பாட்டின் கருத்தைத் தழுவியது.

மெய்ஞ்ஞானச் செல்வர்கள் ௨

சோலையப்ப சுவாமிகள்

[திரு. சு. ஆ. இராமசாமிப் புலவர்]

தோற்றம்

சோலையப்ப சுவாமிகள் என்னும் பெயருடைய இவர் ஏறக் குறைய இருநூறு யாண்டுகட்கு முன்னர்க் கீழைக் கடற்கரை யோரத்தில் உள்ள வேடநத்தம் என்னும் ஊரில் அனுப்பக் கவுண்டர் குலத்தில் தோன்றினர். இவர் இளம்பருவம் முதற் கொண்டே அறிவு நூல்களைக் கற்று மெய்யறிவு பெறுதற்காம் வழியை நாடிநின்றார். வேடநத்தம் சிற்றூர் சேதுவுக்குச் செல்லும் வழியில் அமைந்தது. இராமேசுவரத்திற்குப் போகும் வடநாட்டுத் துறவிகள் இவ்வழியே செல்லுவார்கள். அவ்வாறு செல்லுவோருக்கு வேண்டிய உதவிகளை இவர் செய்து அவர்க ளுடைய அருளைப்பெற்றார். அவ்வாறு செல்வோர்களில் தகுந்த பெரியோர்களிடம் அருளுரை பெற்றுத் தத்துவ உண்மைகளை நன்றாய்த் தெரிந்துகொண்டார்.

ஆசிரியர்

பிறகு இவர் எப்போதும் வென்றான் என்னும் ஊருக்குச் சென்று அங்குப் பள்ளிக்கூடம் ஒன்று வைத்து மாணவர்கட்குக் கல்வி போதித்துக் கொண்டிருந்தார். மாணவர்களிடத்தில் இவர் பேரன்பு காட்டியபடியால் அவர்களும் இவரிடத்தில் மிகுந்த பற்றுடையவர்களாக இருந்தார்கள். பின்னால் நிகழக்கூடிய செய்திகளை முன்னால் அறிந்து சொல்லும் ஆற்றலும் இவரிடம் அமைந்திருந்தது.

ஐயப்ப சுவாமிகள்

இவர் பள்ளிக்கூட ஆசிரியராக அமர்ந்திருந்த காலத்தில் கழுகுமலையில் இருந்து துறவியொருவர் எப்போதும் வென்றான் ஊருக்கு வந்தார். அவருடைய பெயர் ஐயப்ப அடிகள். அவர் ஊருக்கு வடக்கில் இருந்த குளக்கரையில் தங்கியிருந்தார். சோலையப்ப சுவாமிகள் ஐயப்ப அடிகளைக் கண்டு வணங்கினர். அவரையே தம்முடைய குருவாகக் கொண்டு ஒழுகினர். அவ ருக்கு வேண்டிய தொண்டுகளைச் செய்தார்.

தீயைத் துணியில் முடிதல்

ஒருநாள் ஐயப்ப அடிகள் சோலையப்ப சுவாமிகளைப் பார்த்து "சிறிது கஞ்சாவும் நெருப்புந் தேடிக் கொண்டுவா" என்று கட்டளையிட்டார். சோலையப்ப அடிகள் விரைந்து சென்று கஞ்சாவைப் பெற்றார். பிறகு ஒரு வீட்டிற்குச் சென்று "சிறிது நெருப்பு வேண்டும்" என்று கேட்டார். வீட்டில் இருந்த பெண் நெருப்பை ஒரு கரண்டியிலே எடுத்துக்கொண்டுவந்து வேறெதிலேனும் வாங்கிக் கொள்ளுமாறு கூறினாள். சோலையப்ப அடிகள் சுற்றுமுற்றும் பார்த்தார். நெருப்பை வாங்குவதற்கு எதுவும் அகப்படவில்லை. தம்முடைய ஆடையின் ஒரு முனையிலே வாங்கி முடிந்துகொண்டு சென்றார். குருவினிடம் கஞ்சாவைக் கொடுத்துவிட்டுத் தீயையும் முன்தானையில் இருந்து அவிழ்த்து எடுத்துக் குருவிடம் கொடுத்தார். ஐயப்ப அடிகள் இப் புதுமையைக் கண்டு வியப்படைந்தார். அது முதல் சோலையப்ப சுவாமிகளை ஐயப்ப அடிகள் மிகவுங் கண்ணுங் கருத்துமாகப் போற்றிவந்தார். பிறகு ஆசிரியரும் மாணவரும் பல ஊர்கட்குச் சுற்றுப் பயணஞ் சென்றார்கள். மக்களுக்கு அறிவுரை வழங்கி அவர்களை நல்வழியில் நடக்கச் செய்தார்கள்.

வற்றிலை பாக்கு

ஒருநாள் சோலையப்ப அடிகள் உணவு சமைத்துக்கொண்டிருந்தார். அப்போது ஐயப்ப அடிகள் இவரைக் கூப்பிட்டுச் "சிறிது வெற்றிலை பாக்கு இடித்துக்கொண்டு வா" என்று கட்டளையிட்டார். அப்பொழுது வேலை மிகுதியாக இருந்தபடியால் வழக்கம்போல் பாக்கு வெற்றிலைகளை இடித்துக்கொடுக்க முடியவில்லை. தம் வாயிலே போட்டு நன்றாக மென்று ஐயப்ப அடிகளிடங் கொடுத்தார். அவர் அதனை வாங்கி வாயிலே போட்டுக்கொண்டு, "இன்று நீ இடித்துக் கொடுத்த வெற்றிலை பாக்கு மிகுந்த மணம் பொருந்தியதாகவும் மனத்திற்கு இனிமையுடையதாகவும் இருக்கிறதே! எவ்வாறு இதனை இடித்தாய்? இதனை இடித்த கருவியைக் கொண்டு வா, பார்ப்போம்" என்று சொன்னார். குருவினுடைய உரையைக் கேட்ட உடனே சோலையப்பர் தம் வாயிலே போட்டு மென்று கொடுத்த செய்தி தெரியுமாறு தம் தலையைத் திருகிக் கையில் எடுத்துக் காட்டினார். இவர் தெய்வத்தன்மை அமைந்தவராகவும் அட்டாங்கயோகத்தில் வல்லவராகவும் இருந்தபடியால் இவருக்கு இஃது எளிமையான செயலாயிற்று.

இருவருக்கும் மாறுபாடு

ஐயப்ப அடிகள் சோலையப்ப சுவாமிகளின் வியத்தகு செயலைப் பாராட்டினாராயினும் உடனே அவருடைய மனம்

மாறுபட்டது. சோலையப்பரைப் பார்த்து, "உன்னிடஞ் சித்தர்கட்குண்டான குணங்கள் யாவும் கூடிகொண்டிருக்கின்றன. இதனை நான் முன்னரே ஒருவாறு உணர்ந்துள்ளேன். ஆயினும் குருவாகிய என்னிடத்தில் நீ சிறிது அடக்கமாக நடந்துகொள்ள வேண்டாமா? குருவுக்கு மிஞ்சின சீடன் என்பதைக் காட்டு கிறாயே உன்னுடைய இறுதிக்காலத்தில் உடல்வேறு தலைவேறாகப் போகக் கடவது" என்று வசவுரை வழங்கினார். உடனே சோலையப்ப சுவாமிகளும் தம்முடைய குருவைப் பார்த்துத் "தங்களுடைய திருவாக்கை நான் அன்புடன் ஏற்றுக்கொள்ளு கிறேன். குருவாக இருக்கும் தாங்கள் என்னிடத்தில் சிறிதும் அருள் செய்யாமல் இவ்வாறு வசவுரை வழங்கியது தக்கதன்று. ஆகவே சுவாமிகளுக்கும் சுவாமிகளின் வழிமுறையார்களுக்கும் இறுதிக் காலமானது இருப்பிடத்தில் ஏற்படாமல் இதர இடங் களில் ஏற்படக் கடவது" என்று எதிர்வாக்குக் கொடுத்து வசவுரை வழங்கினார்.

ஐயப்ப சுவாமிகள் இறுதி

ஒருவருக் கொருவர் வசவுரை வழங்கிக்கொண்ட குருவும் மாணவரும் பிரிந்தார்கள். ஐயப்ப அடிகள் பலவிடங்களில் சுற்றுப்பயணஞ் செய்துவிட்டுக் கடைசியாய்த் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செட்டியாப்பத்து என்னும் ஊரில் தங்கி யிருந்தபோது அடக்கமானார்.

சோலையப்ப அடிகள் இறுதி

சோலையப்ப அடிகள் தம் குருவைப் பிரிந்து திருநெல்வேலி, ஆழ்வார் திருநகரி முதலிய பல இடங்களிலும் சுற்றுப் பயணஞ் செய்து மக்களுக்குப் பல புதுமைகளைக் காட்டினார். குருசாமிச் செட்டியாருக்குக் குன்மரோகத்தைப் போக்கினார். நாராயண ரெட்டியாருக்குக் கண்ணோயை ஒழித்தார். மாசானமூப்பனா ருக்குக் காசநோய் நீங்கச் செய்தார். மற்றும் பலருக்குப் பலவகையான நோய்களை நீக்கினார். சோலையப்பர் ஒட்டப் பிடாரம் என்னும் ஊரில் உலகம்மன் கோயிலில் சிலகாலந் தங்கியிருந்தார். இரவு கோயிலில் வழிபாடு முடிந்து எல்லோரும் போன பிறகு இவர் தம்முடைய உடலைக் கருத்துடன் பார்த்துக் கொள்ளுமாறு மாணவன் ஒருவனிடஞ் சொல்லிவிட்டுத் தம் தலையோடு மட்டும் விண்வழியாகப் பலவிடங்கட்குஞ் செல்வார். மறுநாள் பொழுது விடியுமுன் திரும்பி விடுவார்.

ஒருநாள் கோயிலில் பூசை செய்கிறவர் வழக்கத்திற்கு மாறாகச் சிறிது நேரம் முன்னால் வந்து விட்டார். சோலையப்ப

அடிகளாரின் தலையற்ற உடலைக் கண்டு அஞ்சினர். ஏதோ மோசம் நேர்ந்து விட்டதென்று ஊரார்கட்குத் தெரியப்படுத்தினர். எல்லோரும் வந்து பார்த்து மாணவனை உசாவினர்கள். மாணவர் உள்ளதை உரைத்தார். ஊரார்கள் உடலையெடுத்து எரிக்க முயன்றார்கள். அடிகளாருந் திரும்பி விட்டார். தம்முடைய மறைமுகச் செயல் வெளியாகிவிட்டதை யுணர்ந்தார். இனிமேல் உடலிற் புகுந்து வசிப்பதில்லை என முடிவு செய்தார். விண்ணில் இருந்தபடியே உருவிலி வாக்காய், தமது உடலை எப்போதும் வென்றான் ஊருக்குக் கீழ்புறம் கருடன் வட்டமிடும் எல்லையில் அடக்கஞ் செய்துவிடுமாறு கட்டளையிட்டு மறைந்தார். அன்பர்கள் அவ்வாறே அவருடைய உடலை அவ்வூருக்குக்கொண்டு போய் அடக்கஞ் செய்தார்கள். இவர் இயற்றிய வியத்தகு செயல்கள் பல என்று விளம்புகின்றனர். இருவரும் வழங்கிக் கொண்ட வாக்குகளும் பலித்துவிட்டன.

நூல்கள்

இப் பெரியார் மீது சிலர் புகழ்ப் பாமாலைகள் பாடியுள்ளனர்.

தமிழக வழிபாட்டின் தனிமாண்பு

"சிவனெனும் நாமந் தனக்கே யுடைய செம்மேனி எம்மானை" விழுமிய முழுமுதலாகக்கொண்டு தொன்றுதொட்டு இன்றுகாறும் தொடர்பாக வழிபட்டு வருவது தமிழகத்தின் தனிச் சிறப்பாகும். சிவமென்னுஞ்சொல் நன்மை, மங்களம் முதலிய விழுப்பொருள்களைக் குறிக்கும் 'சிவத்தைப் பேணின் தவத்திற் கழகு' என்பது தமிழ் மூதாட்டியார் திருமொழி. தவம் என்பது தெய்வ நினைவூட்டும் இல் வாழ்க்கையேயாம். சிவம் அருவம் அருவுருவம் உருவம் என்னும் மூவகை நிலையினையுங் கடந்தது. எனினும் வழிபாட்டின் பொருட்டு அம்மூவகை நிலையினையும் சிவபெருமான் கொண்டருள்வன். அவ்வுண்மை வருமாறு :

பொன்னம் பலம்அருவம் பொற்றாண் அருவுருவம்
பின்உருவம் கூத்தப் பிரான் பொற்றாண்—சிவலிங்கம்

—தொண்டன்

மக்கள் பண்பாடும் மகளிர் நிலையும்

[வித்துவான், சு. குமாரசுவாமி ஆச்சாரி, M. A., மயிலம்.]

(செல்வி சிலம்பு, ௩௪, பரல் ௧௧, ௱௨௬ ஆம் பக்கத் தொடர்ச்சி)

மகளிர் ஆடவருக்கு அடங்குதல்

மகளிர் கற்புநெறி வழுவாது வாழ்தல்வேண்டும். ஆதலின் அவர்கள் கணவர்க்குக் கீழ்ப்படிந்து பணிவிடை செய்து வாழும் கடமையுடையவராயினர். கணவர்களோடு வாழும் காலத்திலும் தம் விருப்பப்படி புணர்ச்சியின்பம் பெறும் உரிமை சமயச் சார்பான சில கட்டுப்பாடுகளால் குறைக்கப்பட்டது. சமயத்தால் எழும் நன்மையை இங்கு ஓர்ந்துணர்தல் வேண்டும்.

> "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை."

> "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

என்னும் வள்ளுவர் வாக்கினை உன்னுக. இக் கற்புநெறி முதலில் ஒருவித வெறுப்புணர்ச்சியை மகளிர்க்குத் தரும் எனினும் சிறிது காலத்திற்குப் பிறகு அந்நெறி தங்களுக்குப் பெருமை யளிக்கிறது என்பதைப் புகழ் விரும்பும் மகளிர் உணர்வர். ஆடவர்கள் தம் புதல்வர்களையும் அடக்கி ஆளும் உரிமையுடையவர் ஆவர். தம் பெற்றோர்களுக்கு அவர்கள் வேண்டும் பொருளைத் தருபவரையே மகளிர் தம் கணவராகக் கொள்ள வேண்டும் என்ற வழக்கம் தோன்றிய காலத்திலிருந்து, தம் கணவரது ஏனைய பொருள்களைப் போல மனைவியரும் ஒரு பொருளாகக் கருதப்பட்டனர். ஆதலின், ஆடவர் தம் மனைவியரை விற்கும் உரிமையும் பெற்றனர்.

தமக்கு அடங்கி உழைப்பவருக்குத்தான் தம் பெண்களைத் தரவேண்டும் என்று பெண்ணின் பெற்றோர் விரும்பியகாலத்தும், மகளிருக்குச் சீதனம் தரும் வழக்கம் விளங்கியகாலத்தும் மகளிர் தம் கணவருக்கு ஏனைய பொருள்கள்போல ஒரு பொருளாக இருக்கிற நிலை மாறியது. கணவனொடு மனைவி சம உரிமை பெறும் நிலை எழுந்தது. சம உரிமை என்ற நிலை எழவே, காம இச்சையை அடக்கிவாழ முடியாத மகளிர் தம் கணவரை விட்டு, விலகிவிடுவது என்ற வழக்கமும் தோன்றியிருக்கிறது. 'ஒருவனுக் கொருத்தி' என்ற கொள்கை நாளடைவில் வளர்ச்சியடைந்

ஆதலால் ஆடவரும் மகளிரும் தமக்குரிய காதலரைத் தாமே தேடிக்கொள்ளவும், வேண்டாதபோது விலகிவிடவும் உரிமையுடையவர்களானார்கள். இந்நிலை கற்புக்கு இழுக்காதலின் பண்பாட்டில் குறைபாடு உண்டாம்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்
திண்மை யுண்டாகப் பெறின்."

பண்பாடில்லா நாகரிகம்

இங்ஙனம் ஆடவர்கள், கணவன் என்றும் தந்தை என்றும் இருவகைப்பட்ட உரிமையின்பம் உடையவராயினர். பெற்றோர்களின் உடன்பாடு பெற்றே மணங்கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடு எழுந்தது. இக் கட்டுப்பாடு மிகுந்ததனால் மகளிர் தம்பெற்றோரின் உடன்பாடின்றியே களவொழுக்கத்திலீடுபட்டுத் தம்மால் விரும்பப்பட்டவனோடு பிறரறியாது தம் ஊரைவிட்டு அகன்றுவிடுவது என்ற வழக்கந் தோன்றியது. இங்ஙனம் உடன்போக்கு நிகழ்ந்தகாலத்தில் பெண்ணின் தமர் சென்று அவர்களைத் தடுத்து அவ் வாடவனோடு பூசலிடுவது முண்டு. அவர்கள் பெண்ணின் கற்புநிலை யுணர்ந்து, அவனுக்கே அவளை மணம் புணர்த்தலும் உண்டு. அங்ஙனம் மணம் புணர்க்குங் காலத்தில் அவன் செய்த குற்றத்திற்காக அவன்பால் பொருள் பெறுதலும் உண்டு. தாம் விரும்பிய பெண்ணை மணங்கொள்ளலாகாது என மகனைத் தாய் தந்தையர் கடியும் நிலையுமுண்டு. அப்போது மகன், தன் தந்தையின் சொத்தில் தனக்குரிய பங்கைப் பெற்றுக்கொண்டு தாய் தந்தையரைவிட்டு விலகி வாழ்தலுமுண்டு. இவ்வாறு தம்பெற்றோர் உடன்பாடின்றியே ஆடவரும் மகளிரும் தம் காதலரோடு வாழும் நிலை மிகுந்ததனால் வியபிசாரம் ஒறுத்தலுக்குள்ளாகியது. ஆதலின், பரத்தையர் கூட்டம் நாட்டில் மலிந்தது.

தொல்காப்பியத்துள்

இந்தச் சிறந்த கொள்கை (கற்புநெறி) வளம்பெறத் திகழ்ந்த காலத்தில் தான் தொல்காப்பியம் எழுந்தது. மேற்கூறப்பட்ட பல்வகைக் காமவாழ்க்கை நிலையின் அடிச்சுவடுகளைத் தொல்காப்பியத்துள் காணலாம். 'களவியல்' எனும் ஒரு பகுதியுள்ளமையினால் ஆடவரும் மகளிரும் தாம் விரும்பியவாறு காம இன்பம் பெறும் உரிமையுடையவராகத் திகழ்ந்தனர் என்பது விளங்கும். 'பாங்கற் கூட்டம்,' 'பாங்கியிற் கூட்டம்,' 'சேட்படை' என்பவைகளால் இக் களவொழுக்கம் அருகிய நிலையில்தான் இருக்கலாமேயொழிய நீடித்தலாகாது என்பது விளங்கும். 'வரைவு கடாதல்'

என்னும் பகுதியினால் மகளிர் ஆடவரைக் கற்புநெறியில் திருமணம் கொள்ளவேண்டும் என்பது புலனும். 'அறத்தொடு நிற்றல்' என்னும் பகுதி, 'மகளிர் களவில் இன்பம் துய்த்த காதலனையன்றிப் பிறரை மணங்கொள்ளுதல் ஆகாது' என்ற வழக்கம் நம் நாட்டில் இருந்தது என்பதை அறிவிக்கிறது. 'நொதுமலர் வரைவுகூறி வரைவு கடாதல்' என ஒரு பகுதி உண்மையினால், மகளிர் களவொழுக்கத்தி லீடுபட்டிருப்பினும் பெற்றோரால் நிச்சயிக்கப்பட்டவர்களையே மணம்செய்துகொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடு நாட்டில் இருந்தது என்பதும் நன்கு புலனும். மகளிர் தாம் விரும்பிய காதலனையடைய இடையூறுண்டாயின் பிறர் அறியாமல் அக்காதலனொடு ஊரை விட்டு அகலுவர் என்பது 'உடன்போக்கு' என்னும் பகுதியால் விளங்கும். 'அறத்தொடு நிற்றல்' என்னும் பகுதியால் மகளிர், தாம் திருமணங் கொள்வதன்முன் கன்னிமை யழியப்பெற்றார் என்ற குற்றம் வாராது காத்துக்கொண்டனர் என்பது விளங்கும். 'வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்' என்னும் பகுதி யால் பெண்ணின் பெற்றோர் அக் குற்றத்திற்குக் காரணமான ஆடவரிடம் தாம் வேண்டும் பொருளைப்பெற்ற பின்னரே அவ் வாடவர்க்கு மகளிரை மணம் செய்துகொடுத்தனர் என்பது விளங்கும். பிறப்பு, குடிமை முதலிய பத்தினையும் ஆய்ந்து பெண்ணின் பெற்றோர் தர, அப்பெண்ணை மணம் கொள்வது தான் சிறந்தது என்ற கொள்கையே சிறந்தது என்பது களவியலை அடுத்துக் கற்பியலை அமைத்த முறையினால் உணரலாம். 'உடன் போக்கு நிகழினும் திருமணச் சடங்கு நிகழ வேண்டும்' என்ற கட்டுப்பாடு இருந்தது என்பது "கொடுப்போ ரின்றியுங் கரண முண்டே" என்பதனால் புலனும்.

நன்முறையில் அமைந்த காமவாழ்வே, சமூகம் நன்னிலையில் விளங்குதற்குக் காரணமாம் என்பது "அகத்திணை மருங்கின் அரிறப உணர்ந்தோர், புறத்திணை யிலக்கணம் திறப்படக் கிளப்பின்," என்னும் தொல்காப்பியர் கூற்றால் விளங்கும். தொல்காப்பியப் புறத்திணை யியலில் காணப்படும் தொடாக் காஞ்சி, ஆஞ்சிக் காஞ்சி, மூதானந்தம், முதுபாலை, தாபதநிலை, பாலைநிலை முதலிய துறைகளும் சமூக வாழ்வில் ஆடவர்க்கு மகளிர் துணையாவர் என்பதை விளக்கும். புறப்பொருள் வெண்பா மாலையில் காணப்படும் தலைத்தோற்றம், உண்டாட்டு, வெறியாட்டு, சிருங்காரநிலை, உவகைக் கலுழ்ச்சி, மூதில் முல்லை, ஆனந்தப் பையுள், நாண்முல்லை, இல்லாண்முல்லை, பான்முல்லை, கற்புமுல்லை, குற்றிசை, குறுங்கலி முதலியனவும் சமூகவாழ்வில் மகளிர் நிலையைப் புலப்படுத்துவன காண்க. பெண்பாற் கைக்கிளை

பற்றியும் பெருந்திணை பற்றியும் தொல்காப்பியம் விரித்துக் கூறவில்லை. அவை சமூக நல்வாழ்விற்கு ஏற்றனவல்ல என்பது தொல்காப்பியர் கருத்தாகும். ஆதலின் தொல்காப்பியர் காலம் நாகரிகத்தின் சிகரமாக விளங்கியது என்பது போதரும். புறப் பொருள் வெண்பாமாலை தோன்றியகாலத்து அரசியல், மக்கள் நிலை, மகளிர்நிலை பற்றி உணரின் தொல்காப்பியர் முதலிய பண்டையோர் கருத்துச் சிறந்தது என்பது தானே விளங்கும். தொழில் வளர்ச்சி, வாணிக வளர்ச்சி, சமய வளர்ச்சி முதலி யனவும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை ஓர்ந்துணரின் நன்கு விளங்கும். "மாதரார், கற்பில் நின்றன கால மாரியே" என்ற கம்பன் வாக்கு இந்நிலையினை நன்கு விளக்குதலையுங் காண்க.

ஆதலின், நாடு நல்வளம் பெறவேண்டுமாயின், திருமணங் கொள்ளும் முன்பும், கொண்ட பின்பும் மகளிர் கற்புநெறி தவறாது வாழ்தல் வேண்டும் என்பது நன்கு புலனாதல் காண்க.

மறைமலையடிகள் நூல்நிலையம்

'மறைமலையடிகள் நூல்நிலையம்' 1958 ஆகஸ்டு 24 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை தொடங்கப் பெற்றுச் செவ்வனே நடந்து வரு கிறது. முதலாண்டு நிறைவு விழாவும் சிறப்புற நிகழ்ந்தது அந்நாள் தொட்டுக் 'கொடுத்து வாங்கும் நூல்நிலையப்பகுதியும்' நிலையத்தின் அடித்தளத்தில் துவங்கப்பெற்று நடந்து வருகிறது. இதிற் சாரும் உறுப்பினர் வைப்புப்பணமாக ரூபா. 10/- (பத்து) செலுத்துதல் வேண்டும். அப்பணமும் உறுப்பினர் விரும்பும்போது திரும்பக் கொடுக்கப்படுந் தன்மையதே. இதைத்தவிர வேறு எவ்விதமான கட்டணமுங் கிடையாது. இதன்கண் இதுகாறும் ஏறத்தாழ நாற்பத்து மூன்று உறுப்பினர்கள் பயன்பெற்று வருகின்றனர். இருந்து கற்கும் நூல்நிலையத்திலும் ஏறத்தாழச் சராசரி நாடோறும் நூறுபேர்கள் பயின்று வருகின்றனர். நூல்நிலைய 'இரண்டாவதாண்டு நிறைவு விழாவும்,' கழகத்து 'ஆயிரத்தெட்டாவது நூல் வெளியீட்டு விழா வும்' அண்மையில் நிகழவிருக்கின்றன. அனைத்துலக நூலகத்திறலர் டாக்டர். எஸ். ஆர். அரங்கநாதனவர்கள் அகரவரிசையில் 'கழக நூற்களின் விளக்கப்பட்டி' ஒன்று நூலகக் கலையின்படி அமைத்துள் ளார்கள். இவ்வருஞ் செயலுக்கு அவர்தம் பொற்காலம் நூற்றிருபது மணிக்குமேல் பயன்பட்டுள்ளது. இத்தனையும் நூல்நிலையத்தால் விளைந்த நலங்களாகும்.

சிலம்பிலே செங்குட்டுவன்

[திரு. ம்து. ச. விமலானந்தம், எம்.ஏ.,]

(செல்வி, சிலம்பு - ௩௪, பரல் - ௧௧, ௩௨௭ ஆம் பக்கத் தொடர்ச்சி)

விறல்மிகு வேந்தன்

அருங்குணம் பல நிறைந்தவன் மட்டுமல்லன், ஆற்றல் நிறைந்தவனும் ஆவான். ஆற்றல் அமையப் பெற்றதோடு ஆற்றலுக்கேற்ற மாற்றுண்மை நிலைபெறச்செய்யும் நீர்மையனும் ஆவான். ஆற்றலுக்கேலாத பகையிலோ அன்றிச் செயலிலோ இவன் சிறிதும் சிந்தை கொள்ளான் என்பதை, நூலறிபுலவோர் பொதியமலையினின்றோ அன்றி இமயத்தினின்றோ கல்லெடுத்துக் கங்கைப் பேர்யாற்றங்கரையிலேனும் காவிரிப்புனலிலேனும் நீர்ப் படை செய்யலாம் எனக் கூறியபோது,

> "பொதியிற் குன்றத்துக் கற்கால் கொண்டு
> முதுநீர்க் காவிரி முன்றுறைப் படுத்தல்
> மறத்தகை நெடுவா ளெங்குடிப் பிறந்தோர்க்குச்
> சிறப்பொடு வரூஉஞ் செய்கையோ வன்று."

(காட்சிக்காதை, ௧௨௨ - ௨௫)

என்று கூறுகின்றமை கண்டு அறியலாம். அன்றியும், நூற்றுவர் கன்னர் வடதிசை மருங்கின் வானவன் பெயர்வது கடவுள் எழுதவோர் கற்கே யாயின் ஓங்கிய இமய மருங்கில் கற்கால் கொண்டு வீங்கு நீர்க் கங்கையில் நீர்ப்படை செய்து தாங்கள் கல் கொணர்ந்து சேர்ப்பதாகக் கூறியபோது, சேரன்,

> "பால குமரன் மக்கள் மற்றவர்
> காவா நாவிற் கனகனும் விசயனும்
> விருந்தின் மன்னர் தம்மொடும் கூடி
> அருந்தமி ழாற்றல் அறிந்திலர் ஆங்கெனக்
> கூற்றங் கொண்டிச் சேனை செல்வது."

(கால்கோட் காதை, ௧௫௮ - ௬௨)

எனக்கூறி அவனது தன் கையே தனக்குதவியாக எண்ணும் தன்மையை—பிறர் உதவி நாடாத பெற்றியை அறிவுறுத்து கின்றமை அறியத்தக்கது.

இவனது வீரத்திற்கும் வளர் தீரத்திற்கும் ஆசான் ஒருவன் கூறும் கூற்றே போதிய சான்றாக அமைவதும் காண்க:

" ஆர்புனை தெரியலும் அலர்தார் வேம்பும்
சீர்கெழு மணிமுடிக்கு அணிந்தோர் அல்லால்
அஞ்சினர்க்கு அளிக்கும் அடுபோர் அண்ணல்! நின்
வஞ்சினத் தெதிரு மன்னரும் உளரோ?"

(கால்கோட் காதை, ௧௧ - ௨௨)

அடுத்து, வில்லவன் கோதை வேந்தற்கு உரைக்குமாற்றான் அமைந்ததாக உள்ள,

" கங்கைப் பேர்யாற்றுக் கடும்புனல் நீத்தம்
எங்கோ மகளை யாட்டிய அந்நாள்
ஆரிய மன்னர் ஈரைஞ் ஞூற்றுவர்க்கு
ஒருநீ யாகிய செருவெங் 'கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கட் கூற்றம்
இமிழ்கடல் வேலியைத் தமிழ்நா டாக்கிய
இது கருதினை யாயின் ஏற்பவர்
முதுநீர் உலகின் முழுவதும் இல்லை."

(காட்சிக்காதை, ௧௬௦ - ௬௭)

எனும் கூற்றே வேந்தனின் வீரமேம்பாட்டிற்கும் வென்றிச் சிறப்புக்கும் போதிய சான்றாகும்.

சடையினர் உடையினர் சாம்பற் பூச்சினராகவும், பீடிகைப் பீலிப்பெருநோன்பாளராகவும், பாடும்பாணியராகவும், பல்லியத் தோளினராகவும், ஆடு கூத்தராகவும் வேடமிட்டுப் பகைவர் எங்கணும் ஏந்துவாள ஒழியத் தாந்துறைபோகுமாறு மறக்களம் முடித்தான் செங்குட்டுவன்—இஃது இவனது வாளாண்மைக் கொரு விளக்கமென்க.

வேல்மிகு தானையும் வென்றிச் சிறப்பும் மிகுந்தவனாயினும் தன் ஆற்றலை வெறும் மண்ணாசைக்கோ அன்றிப் பொன்னாசைக்கோ பயன்படுத்தினானல்லன். அறத்திற்கும் மறத்தைப் பயன்படுத்தினான் என்றே கூறவேண்டும். கண்ணகிக்கு நடுகல் சமைக்கவும், தமிழாற்றலறியாது விருந்தின் மன்னர் கூறிய இகழ்ச்சி மொழியை நீக்கவுமே அவன் வீரம் புரிந்தான் எனக் கூறும் இளங்கோவடிகள் திறம் வியந்து செயல் மறந்து பாராட்டற்பாலது.

" அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை." (குறள், ௭௦)

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கும் ஒரு படி முன்னர்ச் சென்று அறத்திற்கே மறத்தையும் கையாண்டிருக்கிறான் குட்டுவன் எனும்போது இஃதென்னே என வியக்கின்றோம். இல்லையா?

சமயப் பொது நோக்குடையன்

செங்குட்டுவன் சைவ சமயத்தவனாகவே காட்டப் பெறுகின்றான். இதனை,

'செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ.' (கால்கோட், கூஅ - கக)

'ஆனேறு ஊர்ந்தோன் அருளில் தோன்றி
மாநிலம் விளக்கிய மன்னவன்.' (வரந்தரு காதை, கசக - சஉ)

என்ற அடிகளே இனிது விளக்கும். தம் சமயப்பற்றால் பிற பிற சமயங்களை வெறுக்கவோ துறக்கவோ முனைந்தானில்லை. ஏனைய சமயங்களோடு இனிய உறவும் கொண்டிருந்தான். அதனோடு மக்கள் அனைவரும் தத்தம் சமயத்தில் உரிமையும், புறச்சமயத்தோடு உறவும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதற்கோர் எடுத்துக்காட்டாகவும் விளங்கினான்; இமயப் படையெடுப்பின்போது சிவனடி சென்னிமீது வைத்துச் செல்கின்றான்; அவ்வளவில் குடக்கோக் குட்டுவன் கொற்றங்கொள்கென ஆடக மாடத்து அறிதுயில் அமர்ந்தோன் சேடங்கொண்டு சிலர் நின்றேத்தவே அதனை ஒதுக்காது அன்போடு எடுத்தணிந்து செல்கின்றான். இதனை ஆசிரியர்,

"தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்
ஆங்கது வாங்கி யணிமணிப் புயத்துத்
தாங்கின னாகித் தகைமையிற் செல்வுழி."
(கால்கோட், கூ௬ - கூஎ)

என அழகாக நயம்பட நவில்கின்றார்.

மக்கள் நலம் போற்றும் மன்னன்

'மக்கள் நலனே மன்னன் நலம்' என்பதை நன்குணர்ந்தவன் நம் செங்குட்டுவன். தன் குடியைக் கண்ணை இமை காப்பது போல் காத்தனன் எனலாம். இதற்கு இவன் சாற்றிய வஞ்சினமே ஏற்ற சான்றாகும். 'கடவுள் எழுதவோர் கற்கொள்ளாது வறிது மீள்வேனாயின் செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப் பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பிற் குடிநடுக்குறூஉம் கோலேனாகெனக்' கூறுகின்றான். இதனினின்றே இவன் குடிகள் நலம் பேணுவதில் எத்துணைக் கண்ணும் கருத்தும் வைத்துள்ளான் என்பது இனிது போதரும்.

கொங்கச் செல்வி கொடுமுடியேறி விண்ணகமடைந்த காட்சி கண்டு மாட்சியுற்ற குன்றக் குறவரும்கூட,

"எந்நாட் டாள்கொல்! யார்மகள் கொல்லோ!
நின்னாட் டியாங்க ணினைப்பினும் அறியேம்!
பன்னூறு ஆயிரத்து ஆண்டுவா ழியரெனக்"

(காட்சிக், ௬௧ - ௬௩)

கூறுமாற்றான் குட்டுவன் நாட்டில் அல்லலுற்றாரே இல்லையென மொழியக் காண்கிறோம். அன்றியும் விசும்பியங்கு முனிவர் வியன் நிலமாளும் வானவனைக் கண்டு,

"மலயத் தேகுதும் வான்பே ரிமய
நிலயத் தேகுதல் நின்கருத் தாகலின்
அருமறை அந்தணர் ஆங்குளர் வாழ்வோர்
பெருநில மன்ன! காத்தல்நின் கடனெனக்"

(கால்கோட், ௧௦௦ - ௪)

கேட்டுக்கொண்டதற்கிணங்க, மக்கள் துயர் போக்கும் முறையிலே இமயப் படையெடுப்பை இனிது முடிக்கின்றான். மக்களை உடலாகவும் மன்னனை உயிராகவும் ஓதும்,

"யானுயிர் என்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே."

என்னும் புறப்பாட்டையும் (௧அ௬) கடந்து,

"செயிர்இலா உலகினில் சென்று நின்றுவாழ்
உயிர் எலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்."

(பாலகாண்டம், அரசியல், ௧௦)

எனக் கம்பன் காட்டும் காவலனைப் போன்றன்றோ விளங்குகின்றான் வானவர் தோன்றல்!

ஈத்துவக்கும் இனியன்

செங்குட்டுவன் கை கோலேந்தும் கை மட்டுமன்று; கொன்று சிவந்த அவனுடைய கைகள் கொடுத்தும் சிவந்தன. ஈத்துவக்கும் இன்பம் அறிந்தவனே தவிர வைத்திழக்கும் வன்கண்மை யறியாதவன். கொலையுள்ளம் படைத்தவன் மட்டுமன்று; கலையுள்ளம் படைத்தவனும் ஆவான். கூத்தச்சாக்கையர்தம் ஆடலைக்கண்டு அகமகிழ்கின்றான். கலையுள்ளம், நாடி வருவோர்க்கும் தேடியடைவோர்க்கும் கோடி கோடியாக அள்ளித் தந்து அகமகிழ்கின்றான். மாடலமறையோனை ஏற்றிப் போற்றும் முறையிலே ஆடகப் பெருநிறை ஐயைந்திரட்டி (ஐம்பது துலாபாரம்) தன்நிறைப் பொன்னளித்துப் பெருமைப்படுத்துகின்றான்.

கூடிமகிழும் குணத்தினன்

ஆடிப்பாடி அகமகிழ்வதினும், கூடிவாழ்ந்து குலவுவதிலும், இதயங் கலந்து இனியவற்றை இன்புறப் பேசுவதிலுந்தான் இணையற்ற இன்பம் உண்டென உணர்ந்தவன் செங்குட்டுவன். எனவேதான் பலர் தொழு பத்தினிக்குச் சிலை சமைக்குங்காலத்து அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரோடும், பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரோடும், குடகக் கொங்கரோடும், மாளுவ வேந்தரோடும், கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனோடும் கூடி மகிழ்ந்து களிப்பெய்துகின்றான்; விழவயர்கின்றான். அரசர்களைப் பன்னாள் பெருவிருந்து புரிந்து போற்றுகின்றான். இவனது விருந்தோம்பும் அருந்தமிழ்ப் பண்புதான் என்னே!

மூவரிலே முதல்வன்

முத்தமிழ்க் காப்பியத்தில் மூன்று காண்டங்களிலும் முறையே சோழ, பாண்டிய, சேர மன்னர்களையே சித்திரிக்கக் காண்கிறோம். மூவர் திறமும் காட்டப்படுகின்றதெனினும் நம்மனம் நாடும் நீர்மையன் சேரன் செங்குட்டுவனே யாவான். அவனுடைய அரிய பெரிய செயல்கள் நம் அனைவரையும் அவன்பால் அன்பு கொள்ளச் செய்கின்றன.

> "அருந்திறல் அரசர் முறைசெயி னல்லது
> பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாதெனப்
> பண்டையோர் உரைத்த தண்டமிழ் நல்லுரை"
>
> (நடுகற், உ0எ - க)

தான் போற்றாது, கண்ணகி கோவலன் இருவரும் தாங்கள் பிறந்த பொன்னாடு நீத்துப் பாண்டியநாடு ஏகுமாறு செய்தான் சோழன்; பாண்டியனோ கைப்பொருள் இழந்து தவித்த இருவரையும் பிரித்துத் தீது தீர் மதுரை தீக்கிரையாகக் காரணமாயினான். அவர்கட்கு ஆதரவளிக்க வேண்டிய பாண்டியனே கோவலனைக் கொன்று கோல் கோடினான்; ஆனால் செங்குட்டுவனோ பெண்மை போற்றி அடைக்கலமாக வந்த பத்தினிக் கடவுட்குப் பெருஞ்சிறப்புச் செய்யும் வகையிலே இமயம்வரை சென்று கற்கொணர்ந்து கடவுள் மங்கலம் செய்தான். இம்மூவரிலே இறுதியாகக் கூறப்பட்டவனன்றோ எவருள்ளத்தும் நிறைந்தும் சிறந்தும் விளங்குபவனாக உள்ளான். எனவே தமிழ்கெழு மூவரிலே தன்னாடடைந்த திக்கற்ற தகைசால் பூம்புகார்ப் பாவைக்குப் பத்தினிக்கல் சிலை சமைத்த சேரனே சிறந்தோன் எனலாம்—சிறந்தவன் மட்டுமல்லன், நல்லவன்—தூயவன். எனவேதான் பத்தினிப் பெருந் தெய்வத்தைத் தான் மட்டும் விண்ணிலே கண்டு,

"என்னேயிஃ தென்னேயிஃ தென்னேயிஃ தென்னேகொல்!
பொன்னஞ் சிலம்பிற் புனைமே கலைவளைக்கை
நல்வயிரப் பொற்றேட்டு நாவலம் பொன்னிழைசேர்
மின்னுக் கொடியொன்று மீவிசும்பிற் றேன்றுமால்"
(வாழ்த்துக்காதை, க)

என வியக்க முடிந்தது. வேறு எவர்க்கும் கிடைக்காத பேறு குட்டுவனுக்குக் கிடைத்தது. அன்றியும் ஒருமாமணியாய் உலகிற் கோங்கிய திருமாமணி கண்ணகியே 'நீடூழி செங்குட்டுவன் வாழ்க!' என வாழ்த்துமளவிற்கு வளர்ந்து விளக்கமுற்றான் வானவர் தோன்றல் எனின் இவனது ஏற்றத்தை என்னென்பது?

முதல்வனும் முப்பெரும்பணியும்

மூவரிலே முதல்வனாக மட்டுமன்று, முப்பெரும்பணிகளை மேற்கொண்டவனாகவும் காட்சியளிக்கின்றான். இறை திருப்பணியும், தமிழ்ப் பொற்பணியும், நாட்டு நற்பணியும் புரியும் நல்லவன் நம் குட்டுவன். இறைவன் ஒருவனே, அவனையடையப் பலவாய வழிகளும் சிலவாயசமயங்களும் உள ; எனவே அவற்றிற்குள்ளே வேறு பாடோ மாறுபாடோ கூடாதென்ற கொள்கையாலன்றோ ஆடகமாடத்துச் சேடமணிந்து சிந்தை மகிழ்கின்றான். இமையப் படையெடுப்பிற்கு முன்னர்க்கூட இறையடி தொழுதன்றோ எடுத்தடி வைக்கின்றான்?

'விருந்தின் மன்னர் தமிழாற்றலைப் பழித்ததாகவே எண்ணி அருந்தமிழாற்றலை அன்னவர் உணருமாறு கூற்றங்கொண்டு இச்சேனை செல்வதாகக் கூறுவதாலும்,' தென் தமிழாற்றல் (கால்கோட் - கஅ௫), வண்டமிழ் (கால்கோட் - உ௨க), தென் தமிழாற்றல் (நீர்ப்படைக்-௫) அருந்தமிழாற்றல் (நீர்ப்படைக்-கஅ௬), தண்டமிழ் (நடுகற் - க௫௩) எனப் பின்னரும் பாராட்டுவதாலும் அவனது 'தமிழ்ப் பெரும்பணி' புலப்படக் காண்கிறோம்.

அன்றியும் தன்னைப் பழித்தால் என்ன? தன்னையொத்த பிற வேந்தர்களைப் பழித்தால் என்ன? என்றெண்ணித் தமிழகத்திற்கே வந்துற்ற பழிமொழியாகக் கருதிப் படையெடுத்துச் செல்கின்றான் சேரன் என்றால் அவனது நாட்டு நற்பணியை நாம் பாராட்டுமாறு எங்ஙனம்?

இன்னணம் இறையருளே இன்பக் கனவாக, செந்தமிழே சிந்தையாக, தமிழகமே தன் செயல்படு மனமாகக்கொண்ட சேரன் சிறப்பே சிறப்பு!

நிறையும் குறையும்

இங்ஙனம் பன்னலமும் பெருங்குணமும் ஒருங்கமைந்த இப் பெரு வேந்தன்பால் குறையும் காணக்கிடக்கின்றது. வடதிசை

ஆரியரை வணக்கியதாலோ என்னவோ இவன்பால் செருக்கும் சிறிது தலைகாட்டிற்று. அதனால்தான், தான் சிறைப்படுத்திய கனகவிசயரை ஏனை இருபெரு வேந்தர்க்கும் காட்டிவரச் செய்கின்றான். அருந்தமிழாற்றலைப் பழித்தமைக்கு அவர்களைச் சிறைப் படுத்தியமையே போதியதாகும். அத்தோடு நில்லாது அவர்களும் தன் மானம் உடையவர்களாயிற்றே என்பதையும் மறந்து மாற்று வேந்தரை மண்டியிடச் செய்ததோடு அமையாது, இழிவு படுத்துமாற்றான் அவர்களை ஏனைப்பிற வேந்தர்முன் நிறுத்தியது எவ்வாற்றானும் ஒவ்வாத ஒன்றாகும்.

அப்படிக் காட்டிவரச் செய்தபோதும் சோழ பாண்டியர்கள் சொல்லிய மாற்றம் கேட்டுச் சீற்றம் கொள்கிறான்; இஃது இவன்பால் காணப்படும் குற்றம் அன்றெனினும் குறையேயாகும். வென்றிச் சிறப்பால் எவர்மாட்டும் ஏற்படும் இயல்பு இஃதென்க. எனினும் மாடலமறையோன் இடித்துரைத்தபோது தவற்றை யுணர்ந்து அவர்களையும் விழாக்காலத்து விடுதலை செய்து விருந்தோம்புகின்றான்; சீரும் சிறப்பும் செய்கின்றான். குறை யுணர்ந்தபோது நிறைவுபெற்று, குற்றம் அறிந்தகாலை நற்றம் செய்து சிறக்கும் சேரனது செயலால் அவனது தூய உள்ளம் துலங்கக் காண்கிறோம். நிறையிடையே குறைகாணப்படினும் அக்குறையையும் இங்கே அவன் நிறைகளை மேலும் நிலைநாட்டு நல்ல பிற்புலமாக—பகைப்புலமாக(Foil) அமைக்கின்றார் அடிகள் இல்லையா?

முடிப்புரை

இதுகாறும் கூறியவற்றால் செந்தமிழ்ச் சிலம்பில் சிறந்தோங்கும் வேந்தன் சேரன் செங்குட்டுவனே என்பதும்; அவன், குணம் நாடும் கொள்கையன், கடமையுணர் காவலன், பெண்மை போற்றும் பெற்றியன், அடைக்கலம் பேணும் அருளாளன், மானமே பெரிதென மதித்தோன், சான்றோர் உரை போற்றும் சால்பினன், விறல்மிகு வெற்றிவீரன், சமய சமரசப் பொதுநோக்கினன், மக்கள் நலம் நாடும் நல்லவன், கூடிமகிழும் குணத்தினன், ஈத்துவக்கும் இனியன், தவறு கண்டவழி தன்னைத் திருத்திக் கொள்ளும் தூய உள்ளத்தினன் என்பதும்; அகநலனும் அரசு வளமும், செயல் பலமும், சிந்தை நலனும், தமிழ் வளமும், தெய்வத் திருவுளமும் பெற்ற பெருவேந்தன் என்பதும்; மூவரிலே முதல்வனாகவும், முத்தமிழ் வித்தகனாகவும், தனிப்பெருங் காப்பியத்தின் தலையாய முதலாய—மூத்த வேந்தனாகவும் விளங்குபவன் என்பதும் இனிது பெறப்பட்டன.

தமிழ்ச் செய்தித்தாள்களும் தமிழும்

[புலவர் திரு. வி. பொ. பழனிவேலன், பி. ஓ. எல்.]

தமிழை இதுகாறும் நூல்வழக்கு, உலகவழக்கு என இரண்டாகவே வழங்கிவந்தோம். இனி, 'செய்தித்தாள் வழக்கு,' என்ற ஒன்றையும் சேர்த்துக்கொள்ளும் கட்டாயம் ஏற்படுமோ என்ற ஐயம் எழுகின்றது. ஏனெனில் தமிழ்ச் செய்தித்தாள்கள் பெரும்பாலும் தமிழ்ச்சொற்கள் பலவற்றைச் சிதைத்தும், திரித்தும் பிழைபட எழுதிவருவதுடன் ஆங்கிலம் முதலிய பிறமொழிச் சொற்களைத் தமிழ் எழுத்துக்களால் எழுதி வருகின்றன. அவற்றை நாடோறும் படிக்கும் மக்களும் அவ்வாறே தாங்களும் எழுதத் தொடங்குகின்றனர். இன்னும் ஒரு நூற்றாண்டு கழியின் இந்தச் செய்தித்தாள் வழக்கும் புதுமை எழுத்தாளர்களின் இலக்கியப் படைப்புக்களில் இடம்பெற்று விடும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்ச் செய்தித்தாள்களில் பெரும்பாலானவை தமிழ் வளர்ச்சி பற்றியோ தமிழ் முன்னேற்றம் பற்றியோ கவலைப்படுவ தில்லை. தமிழில் எழுதும் கதை, கட்டுரை, கவிதைகளில் எழுத்தாளர்கள் தங்கட்குத் தெரிந்த, தெரியாத எல்லா மொழிச் சொற்களையும் கலந்தே எழுதுகின்றனர். எழுத்தளவில் அவை தமிழாக இருக்கின்றனவே அல்லாமல் சொற்கள் தமிழாக விருப்பது அரிதாயுளது. அத்தகைய கலப்பு (கதம்ப) நடையைத் தான் இன்றைய தமிழ் உலகம் விரும்பிப் படிக்கின்றது. அதனு லன்றோ செந்தமிழ் நடையில் எழுதப்பெறும் கதை, கட்டுரை, கவிதைகளைத் தற்காலச் செய்தித்தாள்களின் ஆசிரியர்கள் ஏற்ப தில்லை. திருப்பியனுப்பப் போதிய அஞ்சற்றலை வைத்து அனுப்பி னாலும் திரும்புவதில்லை.

சிலர் திரு. மறைமலையடிகள் தமிழ் ஒரு தமிழா? என்கின் றனர்; சிலர் தமிழில் பிறமொழிச் சொற்களைத் தாராளமாகச் சேர்த்தால்தான் தமிழ் வளரும் என்கின்றார்கள்.

சிலர் தமிழ் எழுத்துக்களைச் 'சீர்திருத்தவதாகக் கூறி எழுத்துக்கொலை செய்ய முற்படுகின்றனர். சிலர் இந்தியாவி லுள்ள எல்லா மொழிகளுக்கும் ஒரே மாதிரி எழுத்துமுறை இருக்கவேண்டுமென்று கூறி, நாகரி எழுத்தையும், உரோமன் எழுத்தையும் பரிந்துரைக்கின்றனர். இவர்கள் அனைவரும் தமிழ் மொழியின் தன்மையையும், தூய்மையையும், தொன்மையையும்

அறியாததுடன் மொழி நூல் அறிவும் அற்றவரர்வர். தங்களுக்குரிய பணியினைச் சரிவரச் செய்ய இயலாதவர்கள் மொழிச் சீர்திருத்தத்தில் இறங்குவது வியப்புக்குரியதே. மொழிநூல் வல்ல (Ph. Ds) அறிஞர்கள் அந்த வேலையைச் செய்துகொள்ளுவார்கள். அரசியலில் ஈடுபட்டுள்ளவரும், சமுகச் சீர்திருத்தக்காரர்களும் மொழியைச் சீர்திருத்தும் பணியை விட்டுத் தந்தம் கடமைகளைச் செய்வது நலம்பயப்பதாகும்.

சிலர் தமிழை நன்கு கற்றுப் புலமை மிக்கவராயிருந்தும் தாம் பேசும்போதும் எழுதும்போதும் பிறமொழிச் சொற்களைக் கலக்காமல் இருப்பதில்லை. தக்க தமிழ்ச்சொற்கள் இருந்தும் அவற்றை விலக்கி வேற்றுமொழிச் சொற்களை மிகுதியும் பயன்படுத்துகின்றனர். இவர்கள்தாம் தமிழ்ப்பற்றுள்ளவர்களா? தமிழ் வளர்ப்பவர்களா? அத்தகையோரைத் தமிழ்க் 'கொலைஞர்' என்றே கூறலாம். ஏனெனில் தூய தமிழ்ச்சொல் ஒன்றைவிட்டு அதற்கு மாற்றுகப் பிறமொழிச் சொல்லொன்றைப் பயன்படுத்தும்போது அத் தனித்தமிழ்ச்சொல் வழக்கொழிந்துதானே போகிறது? அச்சொல் அப்போது இல்லாது செத்துப்போனதாகத்தானே கருதவேண்டும்? ஆதலின் அத்தகையோரைத் தமிழ்க்கொலை செய்பவர் என்று கூறின் தவறென்னை?

தற்காலத்தில் தமிழ் எழுத்தாளர் என்று சொல்லிக்கொள்பவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பதுபேர் அவ் வினத்தைச் சேர்ந்தோரே. இன்று தமிழில் வெளியாகும் நாள், வாரம், திங்கள் இதழ்களில் பலவும் நாடோறும், வாரந்தோறும், திங்கள் தோறும் தமிழ்க்கொலை செய்யும் பணியில் பிற்பட்டவையல்ல. செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில், குயில் போன்ற ஒருசில செய்தித்தாள்கள்தாம் இப்பணியை மனமறிந்து செய்வதில்லை. தமிழ்ச் செய்தித்தாள்கள் பலவற்றில் யான் கண்ட சில பிழைபட்ட சொற்களையும் அவற்றின் திருத்தமான வடிவங்களையும் பொதுமக்கள் கவனத்திற்குக் கீழே தருகின்றேன்.

பிழையான வடிவம்,	திருத்தமான வடிவம்
முயற்சிக்கிறேன்	முயல்கிறேன்
வரலாறில்	வரலாற்றில்
தவறை	தவற்றை
வயிறில்	வயிற்றில்
சுவற்றில்	சுவரில்
திருவையார்	திருவையாறு
மனதில்	மனத்தில்
இயக்குனர்	இயக்குநர்

தேரினன்	தேறினன்
தவராமல்	தவருமல்
நடப்பட்ட	நடப்பெற்ற
சிலவு	செலவு
பத்துவரவு	பற்றுவரவு
பேதமை	பேதைமை
பொரித்தான் (எழுதினன்)	பொறித்தான்
கட்டடம்	கட்டிடம்
பொருத்துக்கொள்	பொறுத்துக்கொள்
அகட்டி	அகற்றி
கழட்டினன்	கழற்றினன்
புண்ணாக்கு	பிண்ணாக்கு
புடவை	புடைவை
வாழைத்தார்	வாழைத்தாறு
குருவைநெல்	குறுவைநெல்
சூரையாடினன்	சூறையாடினன்
செல்லப்பிள்ளை	செல்வப்பிள்ளை
ரொம்ப	நிரம்ப
நெறஞ்சமனசு	நிறைந்த மனம்
அமுல்	அமல்
உடமை	உடைமை

பெருவழக்காயுள்ள சில சொற்களைமட்டில் குறிப்பிட்டுள்ளேன். இன்னும் சில எளிய சொற்களைக்கூடத் தவருகப் பயன்படுத்துகின்றனர்.

மேலும், செய்தித்தாள்கள் பயன்படுத்தும் பிறமொழிச் சொற்களையெல்லாம் எடுத்து எழுதி அவற்றிற்கு நேரான தமிழ்ச்சொற்களையும் எழுதுவதென்ருல் இவ் ஏட்டில் அடங்கா. தனியே ஒரு நூல் எழுதவேண்டியதுதான். எனவே, ஈண்டு அவற்றை எழுதாது விடுத்தனன். இனியேனும் தமிழில் செய்தித்தாள்கள் நடத்தும் தமிழ்ப்புலமை யற்ரேர், பிழைப்புசகாகச் செய்தித்தாள் நடத்துவோர் முதலியவர்கள் ஒரு தமிழ்ப் புலவரைக்கொண்டாவது இலக்கணப்பிழை எழுத்துப்பிழைகளைக் களைந்து, அச்சிட்டு, வெளியிடுமாறு தமிழ்த்தாயின் சார்பில் இதழாசிரியர் அனைவரையும் பணிவுடன் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

வாழ்க! தமிழ். வளர்க! தமிழரசு.

மாத்தமிழும் மகரவீறும்

[புலவர். தேவி-கவிமணிதாசன்]

உயர்தனிச் செம்மொழியாய், உலகில், தொன்மையும் மென்மையும், திண்மையும் வண்மையும் பெற்று விளங்கும், நம் வண்ணத் தமிழ்மொழி, வளர்பிறையாய் வாழ்வதையும், அறிவுள்ளத்திருக்கையினின்று ஆள்வதையும் அறிவோம். ஆயினும, அத்தகு நற்றமிழ், அவனியில் வளர்ந்து, பாரெலாம் தம்புகழ் பரப்பும் ஒரு சில மொழிகளின் கூட்டரங்கில், இடம் பெற விழையாதார் யார்? ஒருவருமிலர்.

புவியரங்கில் புகழிடம் பெறுமாறு, நம் பைந்தமிழ் வளர வேண்டுமெனில், காலத்திற்கேற்ற கருத்துக்களையும், மாறுதல் களையும், புதுமைகளையும் நாம் ஏற்றுத்தானாக வேண்டும். எனினும், தமிழ்ப்பெரு வயலுக்குத் தொல்காப்பியர், பவணந்தியார் போன்றோர், மொழிக் காவலாக இட்டுள்ள இலக்கணவேலிக்குப், பழுது நேராவண்ணம் பார்த்துக்கொள்ளலும் வேண்டும்.

காலத்தால் வழக்கும், பொருளும், இழந்தும் திரிந்தும் பல சொற்கள், நம் மொழியிடை யுள்ளதெனினும், மீண்டும் வழக்காற்றிற்கு வரும் நிலையிலும் பொருளிலும் பல சொற்கள் உள மிகச் சில சொற்களே, மீண்டும் இன்றைய இலக்கிய உலகில், பண்டு தாம் கொண்டு விளங்கிய பொருளில், தலையெடுக்க வியலா நிலையிலிருக்கின்றன. அவற்றுள், ஈண்டு யான் குறிக்கவிருப்பது, ‘தீமை’ எனும், ஒரு சொல் பற்றியது. பிறவற்றைப் பின் எழுதுவல். பழங்காலத்தே, ‘நெய்’ எனும் சொல், வித்துக்களின் சாற்றைக் குறிக்கும் ஒரு பொதுச்சொல்லாகப் பயன்பட்டுத், தற்போது பாலினின்று எடுக்கப்பெறும் ஒரு பொருளுக்கே யுரிய சிறப்புச் சொல்லாக வழங்கி வருகிறது. அத்துடன், எருமைநெய், பசுநெய் என, வேறுபாடு தெரியுமாறு வழங்கப் பட்டு வருகிறது. இதுபோன்றே, காமம், விளையாட்டு, எண்ணெய் முதலிய பல சொற்கள் பொருள்திரிந்து வழங்குகின்றன.

‘தீமை’ எனும் பண்புப் பெயர்ச்சொல், தற்காலத்தே ‘தீங்கு’ என ஒரு பொருளிலேயே வழங்கி வருகின்றது. அதற்கு, இனிமை எனும் பொருளுமுண்டு எனில், நம்புவாரில்லை. இனிமையெனும் பொருளில் தீமையெனும் சொல், வழக்கற்று விட்டதென்றே துணிந்தியம்பலாம். ஆனால், முற்பட்ட காலத்தில் தீஞ்சொல், தீஞ்சுனை, தீந்தமிழ் போன்ற பண்புத்தொகைகள், தீமை + சொல்; தீமை + சுனை ; தீமை + தமிழ் எனப் பிரிக்கப்படுவது, இலக்கண முறையெனக் கூறில், நகைப்பிற்கிடமாகவுள்ளது. காலத்தின் கோலத்தால், சொற்பொருட் கருத்து மாறியுளது.

"செம்மை ....தீமை........இவற்றெதிர் இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே" (நன்னூல் நூற்பா, ௧௩௫) என்னும் நூற்பாவில், 'தீமை' என்பதைப், பண்புப்பொருளினின்றும் வேறு பொருள் பகுக்கப்படாத நிலையையுடைய பதம் எனப் பொருள்கொண்டு உரையாசிரியர்கள் உரைத்திருப்பதால், "ஈறுபோதல் ....இனமிகலினையவும் பண்பிற் கியல்பே;" எனும், அடுத்த நூற்பாவின்படி, தீமையெனும் பண்புச்சொல், மை விகுதி கெட்டு, வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுந்து, தீஞ்சுனை, தீந்தமிழ், தீம்பழம், தீங்கனி என்றெல்லாமாகிறது.

நன்மைக்கு மாறான தீமையெனும் பண்புச் சொற் பொருளில், தீச்செயல், தீயசெயல், தீவினை, தீயவினை என்பன போன்று பல சொற்கள், இன்று தமிழகத்தில் உலவி வருகின்றன. தீச்சொல், தீவினை போன்ற சொற்றொடர்களுக்குத், தீப்போன்ற சொல், தீப்போன்ற வினை என, வலிதில் வேண்டு மென்றே பொருள் கூறுவோரு முளரெனினும், அவ்விடத்தும் அவைகளைப், பண்புவகைத் தொகைகளெனப் பொருள்கோடலே சிறப்புடைத்தாகிறது. எனவே, ஆங்குமத் தீமையெனும் சொல், இனிமையெனும் பொருளிலில்லை எனப் புலப்படுகின்றதன்றோ?

இனித், தீச்செயலும், தீவினையும் போன்ற சொற்றொடர்கள், தீமை+செயல்; தீமை+வினை; என்று பிரித்துப் பொருள் காணும் நிலையில், தீஞ்சுனை, தீந்தமிழ், தீம்பழம், போன்ற இனிமைப் பண்பேற்ற சொற்றொடர்களையும், தீமை+சுனை; தீமை+தமிழ்; தீமை+பழம்; எனப் பிரித்துப் பொருள் கூறுதல், இக்காலத்திற்கு ஏற்புடைத்தா என்பதை எண்ணிடுமின். கருத்தும் காலமும் நோக்கிக் கருதுமின்.

அடுத்து, 'தீம்' எனும் சொல், இற்றைநாளில் பெரு வழக்காய், இனிமையெனும் பொருளில், 'செந்தமிழ் அகராதி' யிலும் இடம்பெற்றுள்ளது. ஒருவகையி லாய்ந்தால், இத் 'தீம்' எனும் சொல், இனிமைப் பொருளில் வழங்கிய, 'தீமை'யெனும் பண்புச்சொல்லின் திரிபே என்பது, தீம்பழம், தீம்பால் முதலிய சொற்றொடர்களை உன்னுவார்க்கு நன்கு புலனாகும்.

தீஞ்சுனை போன்ற பண்புத்தொகைகளில், பண்பினின்றும் வேறுபொருள் பகுக்கப்படாத சொல்லாகிய 'தீமை'யே, இலக்கண விதிப்படி, மை விகுதி கெட்டு, வருமெழுத்திற்கு இனவெழுத்தாக மிகுந்து நிற்கவியலும். "செம்மை.... .. ... நுண்மை யிவற்றெதிர் இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே." எனும் நூற்பாவில், 'தீம்' எனும் சொல்லைச் சேர்க்கவியலாது; அடுத்த நூற்பாவும் அதற்கிடம்கொடாது.

அங்ஙனமாயின், நன்னூலிற்குப் புறனடையாகப், "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே." என, நூற்பா வகுத்த பவணந்தி முனிவர்க்கும், முன்னே யோர்க்கும் எவ்வகையில் பெருமையும் தகுதியும் வழங்குவது?

உரையாசிரியர் உரையை நோக்காது, நூலாசிரியரின் நூற்பா ஒன்றையே, நாம் துணைக்கொள்ளுவோமாயின், 'தீம்' எனும் இனிமைப் பொருளுடைய சொல்லை, உயிர்ற்றுப் புண ரியலின் மகரவீற்று நூற்பா விதியிலடக்கிக் கொள்ளலாம். இங்ஙனம், 'தீம்' எனும் சொல்லுக்கு, "மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும் வன்மைக் கினமாத் திரிபவு மாகும்" (நன்னூல் நூற்பா - உகக) எனும் மகரவீற்று நூற்பாவையும், 'தீமை' யெனும், தீங்குப்பொருளதாக வழங்கும் பண்புச்சொல்லுக்குச் "செம்மை சிறுமை சேய்மை தீமை, வெம்மை புதுமை மென்மை மேன்மை, திண்மை யுண்மை நுண்மை இவற்றெதிர் இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே." எனும், பண்புப் பகுதிக்கு எய்தி யதன்மேற் சிறப்பு விதியா யமைந்துள்ள நூற்பாவையும் கைக் கொண்டு, இக்காலத்துக்கு ஏற்றவாறு பிரித்துப் பொருள் கூறுதல், ஏற்புடைத்தென்று எண்ணுகின்றேன்.

இனி, 'உயிரீறொப்பவும்' என்பதற்கு, உயிர் வரின் மகர மெய் கெட்டு உடம்படுமெய் பெற்றும், வல்லினம் வரின் மிக்கும், மெல்லினமும் இடையினமும் வரின் இயல்பாயும் புணருமென்ற காண்டிகை யுரையாசிரியர், வேற்றுமையிலும், அல்வழியில் பண்புத்தொகை உவமைத்தொகைகளிலும், மெல்லினம் வரின் இருவழிகளிலும் மகரமெய் கெடுமெனக் கொள்க என்றார். அத்துடன், பண்புத்தொகை, உவமைத் தொகையிரண்டு மொழிந்த அல்வழிப் புணர்ச்சியிலும், வினையாலணையும் பெயர், தனிக்குறில் வேற்றுமையின்கண் இறுதி மகரம் பெற்று, வரு மொழி முதலில் வல்லினம் வரப்பெற்றாலும் கெடாது, இன வெழுத்தாகத் திரியும் எனவுங் கொள்க என்றார்.

நாம், மரம் + அடி = மரவடி, மரம் + வேர் = மரவேர், மரம் + கோடு - மரக்கோடு என வேற்றுமையிலும், வட்டம் + ஆழி = வட்டவாழி, வட்டம் + வடிவம் = வட்டவடிவம், வட்டம் + கல் = வட்டக்கல் எனப் பண்புத்தொகையிலும், பவளம் + இதழ் = பவளவிதழ், பவளம் + வாய் = பவளவாய், பவளம் + கால் = பவளக்கால் என உவமைத்தொகையிலும் முடிந்ததை, "உயிரீ றொப்பவும்" எனும் விதியிலும், தீம் + சுனை - தீஞ்சுனை, தீம் + தமிழ் = தீந்தமிழ், தீம் + கனி = தீங்கனி போன்றவற்றை, "வன் மைக்கினமாத் திரிபவு"மாகும் எனும் விதியிலும், 'திரிபவும்' எனும் சொல்லின் உம்மையால், திரியாமலும் வருதலுண்டு

எனப் பொருள்கொள்ளக் கிடத்தலால், தீம்பால், தீம்பழம் போன்றவற்றை அவ்விதியிலும் அடக்கிப் பிரித்துப் பொருள் காண்பதே, மொழி வளர்ச்சிக்கேற்ற காலத்தோடொட்டிய இலக்கணக் கருத்தென்பது எனது துணிபு. ஒரு சில தமிழ்ப் புலவர்பெருமக்களும், இதே கருத்தைக் கொண்டுள்ளனர் என்றும் அறிகின்றேம். ஆதலின், அறிஞர் பெருமக்கள் இக் குறிப்புக், குறையுடைத்தெனக் கருதின் பொறுத்தருள்வார்களென நம்புகின்றேம்.

இனித் தொல்காப்பியர், "மகர விறுதி வேற்றுமை யாயிற் றுவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே" (எழுத். நூற்பா. ௩௧0- நச்சர் உரை) என்றும், ௩௧௨ ஆம் நூற்பாவில், "மெல்லெழுத் துறழு மொழியுமா ருளவே செல்வழியறிதல் வழக்கத்தான," என்றும், ௩௧௪ ஆம் நூற்பாவில், "அல்வழி யெல்லா மெல் லெழுத்தாகும்" என்றும் கூறியுள்ளார்.

தொல்காப்பியர், 'செல்வழி யறிதல் வழக்கத் தான,' எனக் கூறியிருப்பதுடன், நச்சினார்க்கினியரும், 'இனி எல்லாமென் றதனால், அல்வழிக்கண் மகர ஈறு பிறவாற்றான் முடிவன வெல்லாம் முடிக்க' என்றியம்பி நமக்குக் கைகொடுக்கிறார்.

நெருப்பைக் குறிக்கும் 'தீ' யெனும் ஓரெழுத்து மொழியினின்று தீமையெனும் பண்புச்சொல்லும், இனிமைப் பொருள் நல்கும், 'தீமை'ச் சொல்லினின்றே, அன்றித் 'தேன்' எனும் மொழியினின்றே 'தீம்' எனும் சொல்லும் தோன்றியிருத்தல் கூடும். இலக்கியத்திற்கே இலக்கணமாகையால், ஏற்புழிக் கோடலே இனியது. தீயால் இன்பமும் துன்பமும் கண்ட நம் முன்னோர், இவ்விரு பண்புகளையும் ஏற்றதொரு சொல்லாகத் 'தீமை' என வழங்கியிருத்தல் கூடுமல்லவா?

இதுகாறும் கூறியவாற்றான், தீச்சொல் என்புழிப் பண்புத் தொகையாயின், தீமை+சொல், எனவும், உவமைத் தொகையாயின் தீப்போன்ற சொல், எனவும் கொள்வதுடன், தீஞ்சொல் என்புழிப் பண்புத்தொகை யெனவே, தீம்+சொல், எனக் கொண்டு, மகரவீற்று நூற்பாவின் விதி, அமையும் எனக் கண்டோமல்லவா? இனி அறிவியலின் அடிப்படையில் அமைந்துள்ள உடலியல், உளவியல், உழவியல், நுண்பொறியியல், மண்ணியல், விண்ணியல் போன்ற பல துறைகளில் எழுந்துள்ள புதுமைப் பூந்தமிழ்ச் சொற்களுக்கு, இலக்கண அமைதிகளை இனி யடுத்த கட்டுரைகளில் இயம்புவோம்.

காலை இசைப்பா *

[திருவாட்டி. C. பத்மாவதி, எம். ஏ.]

இறைவா! இப்பாரில் வாழ்மக்கள் அனைவருடைய எண்ணங்களையும் இயக்குபவன் நீயே! இந்திய நாட்டின் வருங்கால நிலைமையை உருவாக்கித் தருபவன் நீயே! இந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மக்களின் இதயங்களில் உன் பெயர் உணர்ச்சிக்கனலை எழுப்புகிறது. உனக்கு வணக்கம் செலுத்துகையில், அவர்கள் பாடும் புகழ் இமய விந்திய மலைகளின் வாயிலாக எங்கும் எதிரொலிக்கின்றது. கங்கையும் யமுனையும் பாடும் இன்னிசையொடு அப் புகழ் இசையும் ஒன்றி இணைகிறது. அன்றியும், இந்தியப் பெருங்கடலின் அலைகளும் உன் புகழைப் பாடிப் பரவுகின்றன. இங்ஙனம் யாவும் உன்தன் நல் ஆசிக்கு இறைஞ்சுகின்றன. நாட்டின் விதியினை நாட்டும் நாயகமே! இம் மாநில மக்களின் காப்பு உன்பொறுப்பில்தான் உள்ளது.

இறைவா! வெற்றி வெற்றி! வெற்றி உனக்கே!

இரவும் பகலும் உன் அரியணையின் முன்னிலையில் கூடுவதற்காக, நீ அழைக்கும் குரல், எந்நாளும் எம்மதத்தினர் செவிகளிலும் ஒலிக்கின்றது. அவர்கள்தம் அன்பிற் கறிகுறியாக உன்னைப் பராவுகின்றனர். நாட்டின் விதியினை நாட்டும் நாயகமே! அனைவரும் ஒற்றுமையாய் வாழ்வு நடாத்த நீயே வழி அமைத்துத் தருகிறாய்.

இறைவா! வெற்றி வெற்றி! வெற்றி உனக்கே!

கரடுமுரடான நெறிகளிலே தேரைச் செலுத்தும் பாகனைப் போல, மக்களினத்தை எண்ணற்ற கடுஞ் சிக்கல்களினின்றும், கடினமான நிலைமைகளினின்றும் நன்கு காத்து, மீட்டு வந்துள்ளனை. உன்னுடைய வெற்றிச் சங்கத்தின் முழக்கத்தால், உறுதி இழந்தவர்க்கு உரம் ஊட்டி, உறுதுணையாய் இருந்து, பல இடர்களினின்றும் காத்து அழைத்துவந்துள்ளனை. நாட்டின் விதியினை நாட்டும் நாயகமே! உன் ஆணையே உலகுக்கு வழிகாட்டியாக விளங்குகிறது.

இறைவா! வெற்றி வெற்றி! வெற்றி உனக்கே!

பன்னெடுங்காலமாக, உதவியற்று, இருளில் அழுந்திச் சோம்பிக்கிடந்த நாட்டை, ஊக்கமும் உணர்வும் பெற்று முன்னேறும் வரை, அன்புருவாய அன்னைபோலப் பன்னாள்

---

* அறிஞர் தாகூரின் 'Morning Song' என்ற பாட்டின் கருத்துரை.

உறக்கமின்றிப் பல பேரின்னல்களினின்றும் போற்றிவந்தனை நாட்டின் விதியினை நாட்டும் நாயகமே! துன்புறும்போதில் தோன்றாத் துணையாயிருந்து, கவலுறுங் காலத்தில் காவலனாகவும் உதவியுள்ளனை.

இறைவா! வெற்றி வெற்றி! வெற்றி உனக்கே!

பொழுது புலர்கிறது; இருளும் இரிகிறது. புள்ளினங்கள் பண் இசைக்கின்றன. காலை இளங்காற்றுப் புத்துயிர் அளிக்கின்றது. தாய்நாடு புத்துணர்வு பெற்றுக் கண்விழிக்கிறது; உன் பேரருளினால் நல் ஆசியும் பெற்று, உன் திருவடி வீழ்ந்து நன்றியறிவுடன் தன் வணக்கத்தைச் செலுத்துகிறது. நாட்டின் விதியினை நாட்டும் நாயகமே! எவ்வகை நலங்களும் வழங்கும் அரசர்க்கரசே!

இறைவா! வெற்றி வெற்றி! வெற்றி உனக்கே!

இழிசொல் ஏன்றல் என்னை

[திரு. அ. கணேசன்]

நலவள மெல்லாம் நனிமிகப் பொருந்தி
நாமகள் நாவினிற் பீடுற நடந்து
கனிமொழித் தமிழினில் மணிமிடை பவளம்
காணாத லழகே யெனப்பழி யேற்றிய
பொய்ம்மொழி யாளர் பொய்யுரை கடிந்து
போதக முத்தமிழ் மாக்கட லுடனே
ஆரிய மாங்கிலக் கடல்களை முகந்து
பாரிய துறைகளில் மேவுறப் படிந்து
உலகிய லறிந்த பலகலைப் புலவரும்
அலகியற் சோதிய னருந்தமிழ் மீட்டும்
இருந்தவா றென்னே யெனவுளம் மகிழப்
பொருந்திய சொற்களைப் பொற்புறக் குயிற்றிப்
புதுவளம் புதுக்கிய வணிகல மெல்லாம்
தண்டமிழ்ச் செல்விக் கழகுறப் பூட்டித்
தனித்தமிழ் அரசியைத் தகவுறக் காட்டிய
அருங்கலைச செல்வ னொன்றநூற் புலவன்
தனித்தமிழ் சைவந் தன்னிரு கண்ணெனப்
பாங்குறப் போற்றிய மாத்தமிழ்க் கடலோன்
மறைமலை யடிகள் திறம்பயில் சொல்லினைக்
குறையென நாவாற் குழறின ரம்ம
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து,
இழிசொல் ஏன்றல் என்னை
பேதைசொல் நோன்றல் அறிவெனப்படலோ.

இலக்கியமும் உணர்ச்சியும்

[திரு. தி. நா. அறிவுஒளி]

இலக்கியத்தை ஆக்குவதற்கும், இலக்கியத்தைச் சுவைப்பதற்கும் வேற்றுமை உண்டு. ஆயின், இவ் விரு உழைப்பிற்கும் இலக்கிய உணர்வு வேண்டற் பாற்று. இலக்கிய வாழ்க்கை இரு பகுதிகளைக் கொண்டது. ஒன்று உழைத்து மகிழ்வளிப்பது. பிறிதொன்று சுவைத்து மகிழ்வது!

இலக்கிய உணர்வு என்பது என்ன?

உள்ளம் கற்பனையோடு இரண்டறக் கலந்து, ஒன்றி, தன்னை மறந்து, தன்னை இழந்து தனிப் பேரின்பத்தில் திளைத்து மயங்குவதே இலக்கிய உணர்வு எனலாம்.

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் ஓரளவு இலக்கிய உணர்வு படைத்தவர்களாகவே இருக்கிறார்கள். உள்ளத்தின் இயற்கையே இலக்கிய உணர்வு அமைந்ததாக இருக்கிறது.

குழந்தைகளிடத்தில் கலை உணர்வையும், இலக்கிய உணர்வையும் இயல்பாகக் காணலாம். உள்ளம் கற்பனையால் வாழ்வது; கற்பனையோடு கை கோத்துத் திரிவது. அவ்வாறு திரிவதில்தான் உள்ளத்தின் உரிமை சிறப்படைகிறது.

விரிந்து மணக்கும் மலர் இதழினும், சிரித்து மயக்கும் செவ்விதழாளின் அழகினும், தண்ணென் ஒளியால் ஒள்ளிய உணர்வைத் தழையச் செய்யும் தவழ் நிலவினும், மெல்லெனத் தழுவி நல்ல இன்பந் தரும் தமிழனைய தளர்நடைத் தென்றலின் பத்திலும், பூவார் பொழிலினும், பாவார் பண்ணின்பத்திலும், விண் நல்கும் வியப்பெழிற் கண்காட்சியினும், இயற்கை எழிலின் இன்னரும் எழில் இலக்கியமாய ஒவ்வொரு சுவைப் பெருங் காட்சிகளிலும் மக்களகத்துள்ளே மாளாத மாண்பார் இலக்கியங்கள் பேருணர்வை மூட்டுகின்றன.

நீலப் பேரார் கலியினெதிரே நின்று; நெஞ்சுணர்வெல்லாம் நீக்கமில் ஓர் உணர்வாக, அகங்கரைந்து, மொழிமறந்து, விழிநீர் வார உணர்வால் கட்டுற்று நிற்கும் ஒருவனும் இலக்கிய உணர்வு உடையவனே. மூவேந்தர் போற்றிய பாவேந்தர் பாட்டெழில் ஆய்க்கும் பண்பழகுடைய ஒருவனும் இலக்கிய உணர்வு உடையவனே.

"நிலா நிலா ஓடிவா! நில்லாமல் ஓடிவா!
மலைமேலே ஏறிவா! மல்லிகைப் பூக் கொண்டுவா!

எனத் தாயும் சேயும் நிலாமுற்றத்தில் நின்று வானிலே எழிலரசியென விளங்கும் விண்ணிலவை விருந்தாளியாக அழைக்கின்ற தூய உணர்வுநிலை ஊனையும், உணர்வையும், உயிரையும் உருக்குவ தொன்றன்றோ!....இதே காட்சியைப் புலவன் ஒருவன் தீஞ்சொற் கவிதையில் பாடி அமைப்பின் அஃது இலக்கியப் பாட்டாக மலர்ந்து விடுகிறது!

"தங்க வளைக்கையில் தன்மகவை ஏந்தியவள்
பொங்கு நிலாமுற்றம் போயிருக்க — செகுதலை
அங்காந்து ஆர்ப்பரித்து ஆர்வமொடு 'வா' என்று
திங்கள்மேல் நீட்டும்தன் கை."

இந்நேரிசை வெண்பாவைக் கற்கும்போது ஒருவன் சுவைக்கும் இலக்கிய உணர்ச்சியை, மேற்காட்சியைக் காணும்போதும் ஒருவன் துய்க்கிறான் அன்றோ? ஆகவேதான் வாழ்விலக்கியங்கள் சாகாது காலம் வென்று வாழ்கின்றன. ஏனையவை பாழ்பாட்டு மாய்கின்றன.

குழந்தையின் நெஞ்சில்கொஞ்சும் இளமை அழகுணர்ச்சியை அறிவால் அளந்துரைக்க முடியாது. நிலவைக் கண்டு, நினைவை இழந்து, அதைப் பற்றிப் பலப்பல எண்ணும்; பலப்பல கற்பனை செய்யும், பலப்பல கனவுகள் காணும். அத்தூய உணர்வுகளை என்னவென்று எழுதி முடிப்பது? அத்தகைய ஒள்ளிய உணர்வுப் பெருக்கில் ஒரு துளியே, "நிலா நிலா ஓடிவா!" என்ற இனிய எளிய இசைப் பாடல். குழந்தைமை உணர்வைத் தூண்டக் கூடிய அப்பாட்டை முதன் முதலில் பாடிய புலவர் யாரோ தெரியவில்லை! ஆனால், குழந்தை இலக்கியம் படைக்கும் குழந்தைப் புலவர் அவரே யாவர்! குழந்தை உள்ளத்தைப் புரிந்துகொண்டு, சின்னஞ் சிறு எளிய சொற்களைக் கொண்டு, அழகிய இலக்கிய உணர்வோடு இத்தகைய இன்னிசைப் பாடலை இயற்றிய மேதைக்கு நம் பாராட்டும், நன்றியும் என்றும் உரித்தாகும்.

அதைப் போலவே 'கைவீசல் பாட்டும்' நம் வீடுகளில் நாடோறும் பாடப்படும் குழந்தை இலக்கியப் பாட்டாக விளங்குகிறது.

'கை வீசம்மா கை வீசு! கடைக்குப் போகலாம் கைவீசு!
இனிப்பு வாங்கலாம் கைவீசு! இனிக்கத் தின்னலாம் கைவீசு."

இப் பாடலைத் தாயார் பாட, அதைக்கேட்டு மகிழும் குழந்தைகளின் உள்ள நிறைவும், உணர்வுச் சிறப்பும் உரை கடந்தவை யாகும். குழந்தையரின் குற்றமற்ற எழிற்றிரு விளையாட்டைக் காணக் காண நம் அகமும் முகமும் குழைந்

துருகி மலர்ந்தொளி வீசிப் பேரின்பமுறும்! நாமும் அக் குழந்தையரோடு குழந்தையாகிக்-குளிர்ந்த உணர்வுடையராகிக்-குறுகுறுப்போடு விளையாட அவாவுவோ மன்றோ! அவ்வகை உணர்வு வெற்றியும், பயனுக்கமும் நல்கும் பாட்டினை 'இலக்கியம் அன்று' என்று கூறுவது எவ்வாறு சாலும்?

"காக்காய்! காக்காய்! ஓடிவா!—குழந்தை
கண்ணுக்கு மைகொண்டு வா!
குருவி! குருவி! ஓடிவா!—குழந்தை
கொண்டைக்குப் பூக்கொண்டு வா!"

என்ற பாட்டைப் பாடியவாறு பொட்டிட்டுப், பட்டுடுத்தி, நெய்பூசித் தலைவாரிப் பூச்சூட்டி, எழிலோவியமாகக் குழந்தையை அன்னை காட்டும்போது தாவியணைத்துத், தண்ணென முத்த மிட்டுத், தமிழுணர்வு கொள்கின்றோமன்றோ!! இத்தகைய உள்ளக் குழைவையும், உணர்ச்சி நெகிழ்வையும், உயிர்த் துடிப்பையும் அருளுவதே இலக்கிய உணர்வின் தலையாய பணி. இவ்வாறு பாடும் பாட்டே இலக்கிய உணர்வு செழித்த பாட்டு.

குழந்தைமை உணர்வை மீண்டும் பெற வேண்டும் என்று நம் உள்ளம் ஏங்கும் வண்ணம் ஓர் உணர்ச்சித் துடிப்பை அப் பாட்டுத் தூண்டி விடுகிறதே அதுவே இலக்கியம் செய்யும் பெரும் பணி!....பேராற்றல் மிக்க பணி! இதைப் போலவே தொடித் தலை விழுத்தண்டினார் என்ற ஒப்பில் உயர்புலவர் தம் முதுமைப் பருவத்தில் மீண்டும் 'கல்லா இளமை' வருதல் வேண்டும் என்று ஏங்கினார். அவ் வேக்க உணர்வின் பயனாக உரவோர் உள்ளக் கோயிலின் தூங்கா மணிவிளக்காய்த் துலங்கும் புறநானூற்றில் எழில் பழுத்த இனிய (உ௪௩) பாட்டொன்று கனிந்தது. அவர் பாட்டு இழுமென் மொழியும் விழுமிய உள்ளுணர்வும் கொண்டு கற்பார் அகம் கரையுமாறு விளங்குகிறது.

"இனிநினைந் திரக்க மாகின்று திணிமணற்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கயம் ஆடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையெனல் அறியா மாயமில் ஆயமொடு
உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோடு ஏறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரைஅகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்து மணற்கொண்ட கல்லா இளமை
அளிதோ தானே! யாண்டு உண்டு கொல்லோ!

தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி நடுக்குற்று
இருமிடை மிடைந்த சிறுசொல்
பெருமூ தாளரேம் ஆகிய எமக்கே.'' (புறம்: ௨௪௩)*

இப் பாடல் புலவரின் பழுத்த முதுமைக் காலத்தே முற்றிய புலமையாற்றலோடு பாடப்பட்ட பாடல். அறிவுலகிலும், புறவுலகிலும் பல்லாண்டுகள் பணியாற்றி, ஆழ்ந்த துய்ப்புணர்வுகளை அடைந்து, உடலுரம் தணிந்து ஒடுங்கும் முதுமையில் தம் இளமைக் காலத்தை எண்ணி, இளமையின் அருமை-பெருமையையும், ஆண்மை வேகத்தையும், பொறுப்பற்ற விளையாட்டுப் பான்மையையும், குற்றமற்ற ஒண்மை உணர்வு நிலையையும் நினைந்து உள்ளம் நெக்குருகி, காதலாகிக், கசிந்து, கண்ணீர் மல்கி ஓதுவார்தம் உள்ளம் உருகவும், உணர்வு பெருகவும், உள் நிறைந்த பேரன்பால் உணர்வுருகி, மொழி குழறி, உவகையாகி இரக்க உணர்வின் எல்லையை எய்துமளவிற்கு மிக அழகாக இயற்றி இருக்கிறார் இப் பாட்டைப் புலவர் தொடித்தலை விழுத்தண்டினார்.

இப் பாடலை எண்ணி உணர வேண்டும். வாழ்க்கையின் கோடிக் கரையில் முதுமை அடைந்த ஒவ்வொருவரும் தம் இளமையை எண்ணி உருகுவது உலகியற்கை நிகழ்ச்சியே. இந்த இளமையை எண்ணி எண்ணி எழுச்சி கொள்ளும் முதியோரும்,

---

* மணல் செறிந்துள்ள இடத்தில் வண்டற் பாவைக்குப் பறித்து வந்த பூக்களைச் சூடி விளையாடியும், குளிர்ந்த பொய்கையில், இன்பத்தோடு விளையாடும் இளம் பெண்களோடு கைகோத்து; அவர்கள் தழுவும் போது தழுவியும், அசையும்போது அசைந்தும் மகிழ் சிறக்கப் பேரின்ப விளையாட்டுக்கள் விளையாடியும்; ஒளிவு மறைவு என்பது என்னவென்று அறியாத வஞ்சனை யற்ற, இளமை செழித்த மைந்தருடன் கூடி, உயர்ந்த கிளைகளையுடைய மருத மரத்தின் கிளைகள் பொய்கை நீருக்கு அருகில் வளைந்து தாழ்ந்திருக்கும் உச்சிக் கொம்பிலே ஏறி, கரையில் நின்று காண்பவர்கள் வியந்து மருட்சியடையவும், நீரின் அலையிலே திரைத் துளிகள் சிதறித் துள்ளி எழவும், மிகுந்த தண்ணீரைக் கொண்ட ஆழமான மடுவில் 'துடும்' என்ற ஒலி உண்டாகுமாறு குதித்து; நீரினுள் மூழ்கி, அக் கயத்தின் அடி ஆழம் வரை சென்று, ஆங்கிருந்து மணலை அள்ளி வந்து காட்டிய கல்வியற்ற நல்ல் இளமை இப்பொழுது எங்கே இருக்கிறதோ? .. ஆ! அந்தக் கல்லா இளமை இரங்கத்தக்கது! பூண் செறிக்கப்பட்ட தலைப் பகுதியைக் கொண்ட பெரிய ஊன்றுகோலை ஊன்றி, உடல் தளர்ந்து நடுங்கவும், இருமல் இடை இடையே வருதலால் சில சில சொற்களையே பேசும் மிகப் பெருங் கிழத்தன்மையையுடைய எங்களுக்கு இறந்த காலத்தில் மறைந்து கழிந்துபோன இன்பமான இளமையை எண்ணி, இப்பொழுது இரக்கம் மிகுதியாக உண்டாகிறது.

[குறிப்பு: புறப்பாட்டிலிருக்கும் வேகம், உணர்ச்சி முதலிய நலன்களை உரைநடையில் கொண்டுவர இயலவில்லை. இதுதான் பாட்டினிடம் இருக்கும் பேராற்றல் போலும்!]

இளமையில் தாம் ஆற்றிய மறச்செயல்கள், குறும்புகள், புகழ்ச் செயல்கள், காதல் நாடகங்கள், கல்வி, துய்ப்பு, பணிகள் ஆகியவை பற்றி ஆயிரமாயிரம் கதைகளைக் கூட்டியும் குறைத்தும் கூறுவது யாவரும் அறிந்ததே.

இத்தகைய இயற்கையான வாழ்க்கை உணர்ச்சியை-வாழ்வுண்மையை-முதுமையின் ஏக்கத்தை எத்துணை அழகொழுகப் பாடுகிறார் புலவர்! இஃதன்றோ வாழ்விலக்கியம்!

புலவரின் இயற்பெயர் காலப்போக்கில் மறைந்து விட்டது. மேற்பாடலில் கிழவர்களின் ஊன்று கோலைத், "தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி நடுக்குற்று இருமிடை மிடைந்த சிறுசொல் பெருமூதாளரேம் ஆகிய எமக்கே........" என்று பாராட்டிய ஒப்பற்ற சொல்லாட்சி நலனை உணர்ந்த தமிழறிஞர்கள் புலவருக்கு 'தொடித்தலை விழுத்தண்டினார்' எனப் புகழ்ப் பெயர் சூட்டிவிட்டனர். புலவர் முதுமையுற்றாலும்கூட, அவர்தம் புலமை இளமை எழிலோடும், மிடுக்கோடும் பீடுகெழுமிய திருவிளையாடல் ஆடுகின்றதன்றோ! மேற்பாட்டில் நயம்மிக்க, அழகிய, இனிய சொல்லாட்சிகள் அணி செய்கின்றன:

"கல்லா இளமை, அளிதோ தானே! யாண்டுண்டு கொல்லோ!"

"கரையவர் மருளத் திரையகம் பிதிர, நெடுநீர்க் குட்டத்துத்
துடுமெனப் பாய்ந்து..."

உயர்ந்த கலைஞரின் படைப்புகள் காலத்தை வெல்பவை. அக்கலைகள் காலம் கடந்த மேதை ஆற்றலினின்று தோன்றுபவை; நிலையாமை வாய்ந்த நீளுலகில் நிலைபேறு பெற்று விளங்குபவை. யாக்கை என்னும் இடிகரையில் தொடித்தலை விழுத்தண்டினார் மறைந்தாலும், அவரது உள்ளத்துணர்ச்சி, அவ்வுணர்ச்சி ஓவியமான பேரிலக்கியம் மறையவில்லை! எப்படி மறைய முடியும்?

வாழ்க்கையில் எவ்வாறு உணர்ச்சி உயிரோட்டத்தோடு ஊடாடிக்கொண்டிருக்கிறதோ; அப்படியே இலக்கியத்திலும் உணர்ச்சி உயிர் நாடியாக இயங்குகிறது. உணர்ச்சி வேகம் தானே மக்களினத்தையே வாழவும், வளரவும் செய்விக்கிறது!

சிற்றூர்களில் இரவில் ஒரு வீட்டிலிருந்து மறுவீட்டிற்குப் பெண்டிர் அகல் விளக்கை ஏற்றி எடுத்துச் செல்வர். எப்படி? ஒரு குடத்திலோ, தவலையிலோ அகல் விளக்கை வைத்து எடுத்துச் செல்வர். ஏனெனில் காற்றடித்து விளக்கு அணைந்துவிடாமலிருக்க. இச் சிறிய காட்சியை ஒரு பெரிய புலவர் பார்த்தார். உடனே அந்த மேதையின் மூளை அழகிய இலக்கியப் பாட்டு ஒன்றைப் படைத்துவிட்டது.

குடத்து விளக்கின் ஒளி வெளியே தெரியாது. குடத்தின் உள்ளே மட்டும் 'பளிச்' சென்று சுடர் வீசும். குடத்துக்கு வெளியே ஒளி இல்லை என்பதற்காகக் குடத்தினுள் விளக்கோ, ஒளியோ இல்லையென்று சொல்ல முடியுமா?—இந்தக் காட்சியை, பெண்களின் உள்ளத்தையும், உணர்ச்சியையும் விளக்க அப் புலவர் பயன்படுத்திக் கொண்டார்.

பெண்கள் மிகவும் நல்லவர்கள். மிக மிக நல்லவர்கள்தாம். ஆனல், அவர்களின் மனம் வேறு; செயல் வேறு! எண்ணம் வேறு; சொல் வேறு! உள்ளொன்றும் புறம் ஒன்றுமாக வாழ்வதில் அவர்களுக்கு ஈடு இணை அவர்களேதான்!

எதையும் பொறுத்துக் கொள்ளும் பொறுமைப் பண்பு பெண்களுக்கு இயற்கை அளித்த பிறவிப் பேறு. பெண்டிர் உள்ளத்தில் காமம் மூண்டால் அது வெளியே அவ்வளவு எளிதில் புலப்படாது. நீறு பூத்த நெருப்புப் போல உள்ளுக்குள்ளேயே கனன்று கொண்டிருக்கும். இதனையே புலவர் உணர்ச்சியோடு உவமையாக ஆள்கிறார்.

பெண்களின் உள்ளம் குடம். அக் குடத்துள் காமவிளக்கு உணர்ச்சித் துடிப்பாகிய ஒளியை வீசிக்கொண்டிருக்கும்.

ஏதாவது ஒரு சிறு நிகழ்ச்சி அவர்கள் மனத்தைத் தாக்கி விட்டாலும் போதும்; உடனே குபீரென அந்த உணர்ச்சி மூண்டு விடும். பிறகு? கட்டுக்கடங்காது!........

....இந்த அழகிய உளவியல்பை முத்தொள்ளாயிரத்துள் யாரோ ஒரு புலவர் ஒரு வெண்பாவில் மிக அழகாகப் பாடியிருக்கிறார்.

பாண்டியனிடம் ஒரு பெண் அளவில்லாத காதல் கொண்டு விட்டாள். அவளோ நாணம், நற்பண்பு, பெண்மை யாவும் ஒருங்கே அமையப் பெற்ற மெல்லியல். அவள் காதலோ குடத்து விளக்குப் போல உள்ளத்தினுள்ளேயே சுடர் வீசி ஒளிர்ந்து கொண்டிருந்தது.

ஒருபோது பாண்டியன் ஊர்வலம் வந்தான். அவனைப் பார்த்துவிட்டாள் அவ்விளம் பெண். அவ்வளவுதான்! அவள் காதலுணர்வு கட்டற்று, கரைகடந்து, வேலி தாண்டி, எல்லைமீறி வெளியாகத் துவங்கிவிட்டது. அந்த உணர்ச்சி வேகம் எப்படிப் பரவியதாம்?

பகற்பொழுதில் மலையானது பார்க்கப் பசுமையாக (நீலமாகவும்) குளிர்ச்சியாக, அமைதியாக இருக்கும். பொழுது சாய்ந்து,

மேயச் சென்ற மாடுகள் வீடு திரும்பும் முன்னிரவு நேரத்தில் மலையில் குபீர் குபீரெனத் தீப்பற்றி எரியும். ஓரிடத்தில் தீ மூண்டால் அது மலைமுழுதும் பரவிவிடும்! மலையே பற்றி எரிவது போலத் தோன்றும். இதைத்தான் காட்டுத்தீ - மலைத்தீ - என்பார்கள். மரங்கள் ஒன்றோடொன்று உராய்ந்தோ, சில போது உயிர் வளியின் சேர்க்கைமிகுவதாலோ இத்தகைய தீத் தோன்றுவது வழக்கம். (இவ்வாறு காற்றில் தீத் தோன்றித் திடீரென எரிவதையே 'கொள்ளிவாய்ப் பேய்' எனக் கூறி மக்களில் சிலர் மருள்வர்!) இம் மலைத் தீயை மறைத்துவைக்க முடியுமா? ஊரார், நாட்டினர் யாவரும் பார்க்கும்படி அது கொழுந்து விட்டு எரிகிறதே! அதைப்போலப் பாண்டியனைக் கண்ட பெண்ணின் அடங்காக் காமம் யாவரும் அறியும் மலைத் தீப்போல் வெளிப்பட்டு விடுமாம்! அவ்வளவுதான். இத்தனை நாளும் உள்ளத்திலேயே மூடி மூடி மறைத்து வைத்திருந்த குடத்து விளக்குப் போன்ற பெண்ணின் காமம் மலைத்தீப்போல நாடறியப் புலப்பட்டுக் கெட்ட பெயரை அப் பெண்ணிற்கு உண்டாக்கிவிட்டது! ஊரார் அவளை அலர் (பழிமொழி) தூற்றத் துவங்கிவிட்டனர். அந்தோ! அப்பேதை என் செய்வாள்?

இந்த அழகிய காதலுணர்ச்சியை ஓவியக் காட்சி போல இன்பத் தமிழில் புலவர் காட்டுகிறார்; பாருங்கள்:

"குடத்து விளக்கேபோல் கொம்பனார் காமம்
புறப்படா; பூந்தார் வழுதி—புறப்படில்
ஆபுகு மாலை அணிமலையில் தீயேபோல்
நாடறி கௌவை தரும்." (முத்தொள்ளாயிரம்*)

இப் பாட்டில் குடத்து விளக்கும், மலைத்தீயும் பெண்டிர் காதலுணர்வுக்கு உவமையாக அமைந்து அழகிய இலக்கியச் சுவை பயக்கிறது. இறந்த கால இருளிலே மறைந்துவிட்ட ஊரும் பேரும் அறிய வியலாத யாரோ ஒரு தமிழ்ப் புலவனை எண்ணினால் உருகாத நெஞ்சமும் இருக்குமோ?

காம உணர்வைத் திருக்குறளிலே கூட வள்ளுவப் பெருந்தகை 'தீ' என்றே பாடியுள்ளார்:

"தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ." (௧௧௫௯)

*முத்தொள்ளாயிரம் ௧௮00 ஆண்டுகட்கு முன் தோன்றிய தென்பர். பாடிய புலவரோ; புலவர்களோ அறிய முடியவில்லை. மூன்று தொள்ளாயிரம் (௯00 × ௩ = ௨,௭00) இரண்டாயிரத்து எழுநூறு பாடல்களுக்கு, ௧0௮ பாடல்களே கிடைத்துள்ளன. பிற ௨,௬௯௨ பாட்டுக்கள்...?

வள்ளுவர் வெறுந்தீயின் இயல்புக்கு மாறுபட்ட இயல்புடையது காமத்தீ என்று அழகிய நயத்தோடு வேற்றுமையை விளக்குகிறார். நெருப்பைத் தொட்டால்தான் சுடும். தொடாவிட்டால் சுடாது. ஆனால் புதுமையான காமத்தீயோ தொடாவிட்டாலும் சுட்டுவிடும்!

"மனக்காமம் அகல் விளக்கின் சிறுதீ
புறக்காமம் மலையில் பரவிய பெருந்தீ."

என்ற உள்ளத்துணர்ச்சியை அடிப்படையாக வைத்துக்கொண்டு அழகிய பாட்டிலக்கியம் படைத்த முத்தொள்ளாயிரப் புலவர் புகழை என்னெனப் போற்றுவோம்?

குடத்து விளக்கே போலக் கொம்பனார் காமம் புறப்படாதது போலவே, நல்லோர் (உரவோர்) காம நோயும் வெளியே தெரியாது. இவ்வுண்மையை நாலடியாரில் புலவரொருவர் மிகத் தெளிவாக விளக்குகிறார்.

"பரவா ; வெளிப்படா ; பல்லோர்கண் தங்கா ;
உரவோர்கண் காமநோய் ஓ! ஓ! கொடிதே!
விரவாருள் நாணுப் படல்அஞ்சி யாதும்
உரையாது உள்ஆறி விடும்." (நாலடியார் : ௮௮*)

மிக ஒப்பற்ற, உயர்ந்த காம ஒழுக்கத்தை இப்பாட்டு எத்துணை எழிலோடு, பண்போடு விளக்குகிறது! சீரியோரின் வாழ்வை ஆராய்ந்தால் மேற்பாட்டின் உண்மை நன்கு புலனாகும். பாசமே கொள்கலனாகக் கொண்ட எளிய மக்களின் உள்ள நிலையினின்றும் மேற்பாட்டைக் கற்றால் அப் பாட்டின் கூற்று கற்பனையாய் பொய்யாய்த் தோன்றும். ஆனால், சான்றாண்மை நிறைந்த உள்ளத் துணர்ச்சி நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது பாடல்!!

எளிய பொருள்களுங்கூட ஏற்ற முறையில், ஏற்றவர் வாயிலாக அமையும்போது அவை உயர்வும், சீரும் பெற்று விடுகிறது.

---

* "சான்றோர்களிடத்தில் காமம் மிகுதியாகப் பரவாது. ஒருபோது மிகுந்து விடினும், யாவரும் அறியுமாறு வெளிப்படாது வெளியாகி விட்டாலும், தமக்கு உரிமையுடைய காதலரிடமே தான் வெளியாகும். பிறரிடம் வெளியாகாது. அறிஞர்களின் காமநோய் ஓ! ஓ! மிகக் கொடுமையானது!! தம் உரிமைக் காதலரிடத்தும் கூட அவர் காதலுணர்வோடிருக்கும் போதுதான் தொடரும். அவ்வாறு காதலர் காதலுணர்வற்று இருப்பதை அறிந்தால் உடனே நாணமுறும். பின்னடையும். அவர்மாட்டும் வெளிப்படாது உள்ளத்திலேயே ஆறிவிடும்!

[சான்றோர் நிலையை விளக்குவது இப்பாட்டு சால்புணர்ச்சியோடு கற்றால் ஒழிய இதனுண்மை தெளிதல் அருமையே.]

பொருள்களும், நிகழ்ச்சிகளும், சொற்களும் ஒளிராத மின் விளக்குகள். புலமை என்பது மின்னுற்றல். புலவர் என்போர் விசைக்கருவி. இம் மூன்றும் ஒன்றிணைந்து இயங்கும்போது 'கலை', 'இலக்கியம்' என்ற ஒளி சுடர் கால்கிறது.

உணர்ச்சிகளைப் பாட்டில் கையாள்வதற்கு தனித் தகுதியும், தனிப் புலமை யாற்றலும், தனித்திறமையும் வேண்டும். ஒரே உணர்வு நிலையைப் பல புலவர் பாடும்போது சிலருடையதே யாவருள்ளத்தையும் கவர்ந்து என்றும் வாழும் எழிலிலக்கியமாகி விடுகிறது. ஏனையோர் பிடைப்புக்கள் கடலில் கரைத்த இனிப்புப் போல அழிந்து படுகின்றன!

இலக்கியமும் உணர்ச்சியும் எத்தகைய உறவுடையன என்பதை ஓராங்குத் தெளிய உணர்ந்துணர்ந்து வாழ்வைத் துய்த்து, ஆழ்ந்தாய்ந்து இலக்கியத்தைக் கற்று ஒய்ந்து ஓர்ந்து எண்ணும் போதே சுவைத்தின்புற முடியும்.

இலக்கியம் கற்பவன் மாட்டைப் போல 'அசைபோடும்' திறன் படைத்தவனுகல் வேண்டும். நிறையக் கற்றல் வேண்டும். பின் அமைதியாக அமர்ந்து, ஆழ்ந்து ஈடுபட்டு கற்றவற்றை ஆராய்ந்து சுவைக்க வேண்டும்.

உணர்ச்சி மிக்க இலக்கியத்தின் பேரழகு நிலைக்கொரு நூற்பாவைக் காணலாம்:

"எளிமையில் ஏற்றம் + சிறுமையிற் பெருமை = புலமையின் பேரழகுநிலை."

பயனற்ற இந்தி

உலக வழக்கிற்குப் பயன்படாத வடமொழிமேல் வைத்த போலிப் பற்றால், வளம் நிறைந்த தூய தமிழைக் கெடுக்க முந்துதல் சிறிதும் முறையாகாது.

தமிழுக்குப் புறம்பான மொழிகளை ஆராய்ந்து சொல்லுகின்றேம். தமிழுக்குள்ள சிறப்பு வேறு எந்த மொழிக்கும் இல்லை. இதை எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ளல்வேண்டும்.

தென்னாட்டவர்கள் தமக்கு எவ்வகையிலும் பயன்படாததும், தெரியாததுமான இந்தி மொழிகளில் ஒன்றை வருந்திக் கற்றலால் வீண் காலக் கழிவும், வீண் உழைப்பும், வீண் செலவும் உண்டாகுமேயல்லாமல் வேறொரு நன்மையும் உண்டாகாது என்பதும் நன்கு விளங்கும்.

—மறைமலையடிகள்.

உ

"நம்பி திருமுருகனார் திருமடம்"

[புலவர் திரு. ச. கணபதிராமன், எம். ஓ. எல்.]

சைவமும் தமிழும் தழைத் தினிதோங்கத் தோன்றிய அறுபான் மும்மை நாயன்மார்களுள் முருகநாயனாரும் ஒருவர். கோள்நிலை திரிந்து கோடைநீடினும் தான்நிலை பொய்யாத் தண்டமிழ்ப்பாவை காவிரியாள் பாய்ந்து வளம் சுரக்கும் சோழவள நாட்டினர். திருப்புகலூர் என்னும் ஊரினர்.* எவ்வுயிரிடத்தும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர். அறஞ்சான்ற நெறியினர். புகலூர் வர்த்தமானேச்சரர்க்குப் பூத்தொடுத்துச் சூட்டும் தொண்டினர். சிந்தை இடையறாதன்பும், திருமேனி தன்னில் பொலிவும் கொண்டிலங்கிய இவர் சிவனடியார்கள் வந்து தங்குவதற்கென்று தாம் பிறந்த ஊரான திருப்புகலூரில் திருமடம் ஒன்றமைத்தார். அத்திருமடம், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், திருநீலநக்கர், சிறுத்தொண்டர், முதலிய பெருமக்கள் தங்கியிருந்த பேறுபெற்றது. அத்துணைப் பெருமைவாய்ந்த திருமடத்தைச் சேக்கிழார்,

"ஆங்கணையும் அவர்களுடன் அப்பதியில் அந்தணராம்
ஓங்குபுகழ் முருகனார் திருமடத்தி லுடனாகப்
பாங்கில்வருஞ் சீரடியார் பலருமுடன் பயில்கேண்மை
நீங்கரிய திருத்தொண்டின் நிலையுணர்ந்து நிகழ்கின்றார்
(பெரியபுராணம். திருநாவுக்கரசர் புராணம் - செய்யுள் 243)

என்று குறிப்பிட்டுள்ளார். அத்திருமடத்தில் முதற் குலோத்துங்க சோழ தேவனின் 35ஆம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு அறிக்கையில் இது காணக்கிடக்கிறது.† இக்கல்வெட்டறிக்கையில் திருமுருகனார் திருமடம் என்று மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் இக்கல்வெட்டு மூலத்தில் [THE TEXT] இத்திருமடம் "திருப்புகலூரில் வடக்குத் தெருவில், வடசிறகில் உள்ளது" என்பதைக் குறிப்பிடுகின்றது. இவ்வூரில் இன்றும் இத் திருமடம் மிளிர்வதைக் கண்டு களிக்கலாம். இதனை நமக்கு உணர்த்தும் மூலக் கல்வெட்டு, திருப்புகலூர் அக்கினீசுவரர் கோயில், இரண்டாம் கோபுரத்தின் தென்பாலுள்ள மதிற் சுவரில்

---

* திருப்புகலூர், தஞ்சைமாவட்டம், நன்னிலம் வட்டம், நன்னிலம் புகைவண்டி நிலையத்திற்குக் கிழக்கே மூன்று கல் தொலைவில் இருக்கிறது.

† The Annual Report on South Indian Epigraphy for the year 1927—1928 Ins. No. 88.

இன்றும் ஒளிவிட்டுக்கொண்டிருக்கிறது. அக் கல்வெட்டு பின் வருமாறு :

“புகழ்மாது விளங்க ஜயமாது விரும்ப நிலமகள் நிலவ மலர்மகள் புணர உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி மீனவர் நிலை கெட, வில்லவர் குலைதர ஏனை மன்னவர் இரியலுற்றிழி தர திக் கனைத்தினும் தன் சக்கர நடாத்தி விசை அபிஷேகஞ் செய்து வீர ஸிம் மாஸநத்து அவனி முழுதுடையாளொடும் வீற்றிருந் தருளிய கோவி ராஜகேஸரி பன்மரான திரிபுவனச் சகரவர்த்தி கள் ஸ்ரீ கொலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ருயிரு ஆவது குலோததுங்க சோழ வளநாட்டு பனையூர் நாட்டு ஸ்ரீ முடி கொண்ட சோழ சதுர்ப்பேதி மங்கலத்து பெருங்குறி மகாசபை யோம். இந்நாட்டு உடையார் ஸ்ரீபுகலூர் தேவர் திரிபுவன சண்டேஸ்வர தேவர் பக்கல் நாங்கள் கொண்ட காசு ா. இக்காசு நூறுங்கொண்டு இறையிலி செய்து கொடுத்த நிலமாவது இவ் வூர்கீழ்பிடாகை... .... கட்டளையில் ஸ்ரீ பூமிவதிக்கு கிழக்கு திருக்கண்ணபுர வாய்க்காலுக்கு தெற்கு இரண்டாம் கண்ணாற்று மூ...............த்து மேற்கடைய நிலம் நாலு மாச்சின் னத்தில் தெற்கடைய விளை நிலம் இறையிலி செய்துகொடுத்த பரிசாவது. இந் நிலத்துக்கு வந்த பெருவரி சில்வரி வெட்டி முட்டையாள், எச்சோறு, கூற்றரிசி, திரு........ய சில்ல போந்த குடிமை மற்றும் யெப்படிப் பட்டது நாங்களே யிறுக்கக கடவே மாகவும்

இந்நிலத்தில் போகங்கொண்டு சித்திரைத் திருநாளும் திரு நாளுக்கு சேவிக்க வந்த ஸ்ரீ மாகேஸ்வரரை இவ்வூர் வடக்கில் தெருவில் வடசிறகில் நம்பி முருகனூர் திருமடத்தில் ஊட்டக் கடவ தாகக் கோயில் நம்பி இத்தன்மம் செய்தார் நம்பிராட்டியார் அகப்பரிவாரம் ஏழுலகமுடையார் அகப்பரிவாரப் பெண்டுகளில் ராஜ ராஜன் சோழன் ரம்பையார் ஸபை உள்ளிருந்து பணித்தார். ராஜேந்திர சோழச்சேரி உழைச் சரணன் பசுவதி ஸ்ரீ கொண்ட சோழச் சேரியில் ஏலாயந் ஆதித்தன் ஸோம தேவ ஸகஸ்ரந் திரி புவன மாதேவிச் சேரியில்...... ....அழகிய மணவாளன் திருவிக்கிரம நாராயண ஸ்ரீ அரங்கநாத பட்டர் கவுணியந் திருவ ரங்க நாராயண...........ஊர்க்கணக்கன் சண்டேசுவரன் ஐவேலி யும் தேவூரும் ஆநாற்றங்கு....................காணியுடைய தில்லை வாணன் எழுத்து.”

இக் கல்வெட்டு முதற் குலோத்துங்க சோழனின் முப்பத் தைந்தாவது ஆட்சியாண்டில் ஏற்பட்டது. முதற் குலோத்துங் கன் காலம் கி.பி. 1070—1120 என்று அறிஞர்கள் ஆய்ந்த

முடிபாகும். எனவே இக் கல்வெட்டு கி. பி. 1105இல் வெட்டப் பட்டது என்று தெளிய முடிகிறது. திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், திருநீலநக்கர், சிறுத்தொண்டர் ஆகிய நால்வரும், திரு முருகனார் திருமடத்தில் தங்கிச் செந்தமிழ்த் திறம் பேசி மகிழ்ந் தார்கள் என்று சேக்கிழார் கூறுகிறார். ஆகவே திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் காலமான கி. பி. ஏழாம் நூற்றாண்டே திரு முருகனார் காலமும் ஆகும். கி. பி. ஏழாம் நூற்றாண்டுச் செய் தியை கி. பி. 11ஆம் நூற்றாண்டில் கல்வெட்டில் குறிப்பிடப்பட் டுள்ளது.

மேலும் இக் கல்வெட்டால் புதிய மற்றொரு செய்தியும் நமக்குக் கிட்டுகின்றது. திருத்தொண்டத் தொகை பாடிய சுந்தரமூர்த்திகள், அறுபான் மும்மை நாயன்மார்களுக்கு அடை மொழி கொடுத்துப் பாடினார். ஆனால் முருக நாயனாரை "முருகனுக்கும் முருத்திர பசுபதிக்கு மடியேன்" [திருத் தொண்டத் தொகை] என்றுமட்டுமே கூறியுள்ளார். ஆனால் இம் முதற் குலோத்துங்கன் காலத்தில் வெட்டப்பட்ட இக் கல் வெட்டு அவருக்கு "நம்பி" என்ற அடைமொழி கொடுத்து "நம்பி முருகனார்" என்று குறிப்பிடுவது அறிந்து மகிழ்ந்து போற்றற்குரியதாகும்.

மூந்நூல்

[நாஞ்சில், திரு. கா. கணபதி]

திருக்குற ளென்னும் தெய்வ நூலினை
உருக்க முடனே ஓதுவிர் நாளுமே.
செருக்கும் கீழ்மையும் தீயார் சேர்க்கையும்
இருக்குமா றன்றிச் சுருங்கிப் போகுமே.

திருவா சகத்தை ஒருபொழு தேனும்
கருதியே உளத்தில் மருவுவீர் நலமே
சருகும் கனியும் அயின்றவ ரெய்தும்
திருநிறை அருளே பெருகலும் வருமே.

திருக்கோவை யென்னும் செழுமை நூலை
அருத்தம தறிந்து ஆழ்ந்து கற்பீர்
திருப்பம் வாழ்வில் இருப்ப தறிவீர்
கரப்பொன் றின்றிக் கடவுளை அறிவீர்.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) பழனியில் கீழ்த்திசைக் கலைக்கல்லூரி

பழனி ஆண்டவர் அறநிலையப் பாதுகாவலர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள கீழ்த்திசைக் கலைக்கல்லூரி கடந்த 23-7-60இல் பழனியில் துவக்கப்பட்டது. அமைச்சர் பக்தவத்சலம் அவாகள் இக் கல்லூரியினைத் திறந்துவைத்தார்கள். அதுகாலை, இந்து சமயத்தின் சிறப்புப் பற்றியும் தமிழ்மொழியின் மாண்பு, தமிழரின் பண்பாடு ஆகியவை பற்றியும் சீரிய சொற்பொழிவாற்றினர். சிற்பிகளுக்குப் பயிற்சிதர மகாபலிபுரத்திலும் சுவாமி மலையிலும் அரசினர் பள்ளிகள் நிறுவியுள்ள சிறப்பையும் எடுத்துரைத்தனர்.

குறிப்பு: இத்தகைய கல்லூரிகள் மேலும் பல பல்கி நாட்டில் கலைக் கல்வியை எங்கணும் பரவுவதாக.

(உ) தமிழின் மாண்புபற்றிச் சென்னை ஆளுநர் கருத்துரை

"தமிழ் மிகத் தொன்மையான மொழிகளுள் ஒன்று. தற்போது தமிழின் சிறப்பை அறிந்து அதனைக் கற்க உருசியர் முன்வந்துள்ளனர். இதற்கு முன்னர்க் கிறித்துவப் பாதிரிகள் தமிழிலுள்ள சிறந்த தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர். மொழி கருத்தைத் தெரிவிக்க ஒரு வாயிலாக அமைந்துள்ளது. எனவே மொழி வேற்றுமைகளில் கருத்தைச் செலுத்தி ஒற்றுமைக்கு ஊறுசெய்தல் கூடாது," என்று கடந்த 25—7—60இல் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் பேசிய சென்னை ஆளுநர் திரு. விட்ணுராம் மேதியவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பு: மொழிகள் கருத்தை வெளியிடுதற்கு ஏற்பட்டவை என்பது ஒருபுறமிருக்க, மக்கட்குழுவின் பண்பாடு, நாகரிகம், கலை இன்ன பிறவற்றையும் வெளியிடும் கருவியுமாகும் என்பதை நாம் அறிதல் வேண்டும். அவ்வகையில்தான் தமிழர் தம் மொழிக்கு முதன்மை கொடுத்துப் பேசுகின்றனர். ஒற்றுமை எங்ஙனம் இன்றியமையாததெனக் கருதப்படுகின்றதோ அங்ஙனமே மக்களின் நாகரிகம் பண்பாடு இன்ன பிறவும் காக்கப்படுதல் வேண்டும் என்ற எண்ணம் மக்களிடையே எழுதலும் இயல்பேயன்றோ?

(ங) இலங்கை அரசியலில் மாற்றம்

காலஞ்சென்ற முன்னாள் இலங்கை முதலமைச்சர் பண்டாரநாயகா அவர்களின் மனைவியார் திருவாட்டி சிரிமாவோ பண்டார நாயகா அவர்கள் தற்போது முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். உலகின்கண் முன்னேற்ற மெய்திய தம்முரிமை நாடுகள் பலவற்றினும் மாதரார் சட்டமன்ற உறுப்பினராகவும், ஆட்சித்துறை அலுவலராகவும், அமைச்சராகவும் போந்து பணியாற்றுகின்றனர். ஆனால் முதலமைச்சராக உலகினிலேயே முதன்முதல் வந்தவர் இவ்வம்மையாரே யாவர். ஆட்சிக்கு வந்துள்ள அம்மையாரவர்கள் தமிழர்களையும் சிங்களவர்களையும் ஒரேபடித்தாய் வைத்தெண்ணப் போவதாகவும், சிறுபான்மையினருக்குரிய உரிமைகளை வழங்கப்போவதாகவும் உறுதி கூறியுள்ளார்.

குறிப்பு: அம்மையார் அவர்களின் ஆட்சியிலாவது இதுகாறும் தமிழர் பட்ட அல்லல்கள் நீக்கப்பட்டுத் தமிழர் சிங்களவர் ஒற்றுமை வளரும் என நம்புகிறோம்.

(௪) நாட்டின் ஒருமைப்பாடு பற்றிக் குடியரசுத் தலைவர் கருத்து

"முன்னாளில் இந்தியாவில் பல்வேறு மொழிகள் வழங்கப்பட்டது மட்டுமல்ல, பல்வேறு பண்பாடு பழக்க வழக்கங்களும் நிலவியிருந்தன. இந்தியா பண்டைநாளில் என்றுமே ஒரே ஆட்சியின் கீழ் இருந்ததில்லை. பல சிறு சிறு நாடுகள் நிலவியிருந்தன. அவற்றுள் போராட்டங்களும் இருந்துவந்தன. ஆயினும், அடிப்படைப் பண்பில் இந்தியா ஒன்றாக இருந்தது. இன்றும் இருந்து வருகிறது. இது கடவுளருளால் நமக்குக் கிடைத்திருக்கும் பேறு. இந்த ஒற்றுமையை நாம் பாதுகாத்தல் வேண்டும். அங்ஙனம் பாதுகாக்கத் தவறினால் அது நமக்குத் தீவினையேயாகும். உலகம் நம்மைப் பழிக்கும். எதிர்காலப் பரம்பரையினர் நம்மைக் குறை கூறுவர்" என்று 29—7—60இல் ஐதராபாத்தில் பேசிய காலை குடியரசுத் தலைவர் திரு. இராசேந்திர பிரசாத் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பு: குடியரசுத் தலைவரின் கருத்து மிக மிகச் சீரிய கருத்தாகும். அனைத்திந்தியா மட்டுமன்று, அனைத்துலகும் ஒன்றுபட வேண்டுமென்பதுதான் அறிஞர்கள் கருத்து. ஆனால், அரசியல், மொழி, பொருளியல், பண்பியல் துறைகளில் நாட்டின் ஒரு பகுதியினர் மீது மற்றொரு பகுதியினர் ஆதிக்கம் செலுத்தும் மனப்பான்மை மாறினாலன்றி—மக்கள் தம்முரிமையோடு வாழ வகைசெய்யப்பட்டாலன்றிக் குடியரசுத்தலைவர் போன்றாரின் கருத்துரைகள் பயன் தருதல் கடினமே.

(௫) டாக்டர், அ. சிதம்பரநாதன் செட்டியார் உருசியாச் செலவு

சென்னைப் பல்கலைக் கழக ஆங்கிலம்—தமிழ் அகராதித் தொகுப்பாசிரியர் குழுத் தலைவரும், 'செந்தமிழ்ச் செல்வி' ஆசிரியர் குழுத் தலைவரும், செந்தமிழ்க் காவலருமான டாக்டர், அ. சிதம்பரநாதச் செட்டியார். எம். எல். சி. அவர்கள் மாஸ்கோவில் 9-8-60 இல் நடைபெறும் உலக மொழிப் பேரறிஞர் மாநாட்டிற்கு இந்திய அறிஞர் தூதுக்குழுவில் தென்னகத்துத் தூதுவராகச் சென்றுள்ளார். சென்னைப் பல்கலைக் கழகம் மொழித்துறை இலக்கியத்துறை ஆராய்ச்சிக்கென முதன்முறையாக இவரை அனுப்பியுள்ளது. கடந்த 4-8-60 இல் தமிழகப் பெருமக்களும் தமிழறிஞர்களும் மீனம்பாக்கம் விண்ணூர்தி நிலையத்தில் திரு. செட்டியாரவர்களை வாழ்த்தி வழியனுப்பினர்.

குறிப்பு: தென்னகத்தின் சார்பில் மொழிப் பேரறிஞர் மாநாட்டிற்குச் செல்லும் இவர் பல்லாற்றானும் தகுதி வாய்ந்த தகைமையாளர். இவர் தம் உருசியாச் செலவால் முதன்மைத் தமிழுக்கும் தமிழகமக்கட்கும் வரும் மாண்பு குறித்துத் தமிழகத்தார் களிபேருவகை எய்துவர். அவர் செலவு செவ்வனே நிறைவேறவும் மாநாடும் சிறப்புற நிகழவும் வாழ்த்துகிறோம்.

(௬) பண்டித கா. பொ. இரத்தினம் அவர்கள் உருசியாச் செலவு

இலங்கைத் தமிழ் மறைக் கழகத் தலைவர், செந்தமிழ்க் கலைமணி வித்துவான், கா. பொ இரத்தினம் எம் ஏ. அவர்களும் மாஸ்கோவில் நடைபெறும் மொழிப் பேரறிஞர் மாநாட்டிற்குக் கடந்த 4-8-60 இல் இலங்கையிலிருந்து பயணமானார்கள். இவ்விருவர்களின் செலவுகளும் தமிழ் மக்களின் பாராட்டிற்குரியன.

மதிப்புரை

"சிறுவர் பாட்டு"

[ஆசிரியர் திரு நாரா நாச்சியப்பன், அவர்கள். விலை ரூபா ஒன்று வெளியிடுவோர் 'தாமரைப் பதிப்பகம்' 97, பிராடுவே, சென்னை-1.]

இந்நூல் கண்கவர் வனப்பினதாய்ப் பாட்டுக்குப் பொருத்தமான பன்னிற வண்ண ஓவியங்களுடன், உயர்ந்த தாளில், அழகிய எழுத்துக்களால் ஆக்கப்பட்டுள்ளது. பாட்டுக்கள் கற்பார்க்கு எளிதில மனத்தில் தங்கும் முறையாக அகரவரிசையில் கோத்துள்ளார்கள்.

சிறுவர்க்கு வேண்டிய இன்றியமையாத பயனுள்ள பாடல்களை ஆசிரியர் எண்ணி இனிமையும் எளிமையும் இன்பமும் பொதுளப் பாடியுள்ளார் இசையமைதியும், ஆற்றொழுக்கும் கவர்ச்சி நடையும் பொருந்தியன, எல்லாப் பாட்டுக்களும். இது பாட்டுப்புத்தகமாக அமையினும் ஏடு தொடங்கும் மாணவர்கட்கு ஒருபுடை நெடுங்கணக்கு (அரிச்சுவாடி)ப் போன்றும் அமைந்துள்ளது.

இதனைக் கல்வித்துறையாளர் சிறுவர் வகுப்புக்களுக்குத் துணைப் பாடமாக வைத்துத் துணைபுரிவது நல்லது. ஏனைப் பெரு மக்களும் இதனை வாங்கியும் வாங்குவித்தும் ஆசிரியர் மேன் மேலும் இம் முறையில் பல நூல்களை யாத்துத் தமிழுக்கு ஆக்கஞ் செய்யத் துணைபுரிவார்களாக.

"சிவமலைப் பிள்ளைத்தமிழ்"

இப் பிள்ளைத் தமிழைப் பாடியளித்த நூலாசிரியரின் பெயர் புலப்படவில்லை யெனக் குறிக்கப்பட்டுள்ளது. இந் நூலைப் பல விடங்களில் தேடியும் முற்றும் பெறமுடியாத நிலையில் கிடைத்தவரையுள்ள சுவை மிக்க பாடல்களை முருகன் அடியவர்கள் விரும்பி ஓதுதற்குத் துணையாக 'முதுபெரும் புலவர், வித்துவான், வே. ரா தெய்வசிகாமணிக் கவுண்டர்' அவர்கள், (ஈரோடு செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியின் முன்னாள் தலைமைத் தமிழாசிரியர்) அழகிய குறிப்புரையும் வரைந்து வெளியிட்டுள்ளார்கள் இதன்கண் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி ஆகிய பருவங்களுக்குரிய பாடல்கள் பத்துக் காணப்படுகின்றன இதனை மெய்யன்பர்கள் வெளியீட்டாசிரியர்க்கு அஞ்சற்றலை விடுத்துப் பெற்றுக்கொள்ளலாகும்.

"மறைமலையடிகள் வரலாறு"

[இதன் ஆசிரியர் திரு. மறை. திருநாவுக்கரசு அவர்கள், இதன் விலை ரூபா 15/- கிடைக்குமிடம்: திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 1/140. பிராட்வே, சென்னை-1.]

ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் வரலாறு அனைவர்கட்கும் வாழ்க்கை வழிகாட்டியாய், மலை விளக்காய் நிலைபெற்று நின்று நீங்காத் துணைபுரியும். அவ்வரலாறு உரியவர்களால் எழுதப்படுவது உயர்வுடைத்தாகும். ஆயினும் உரியவர்கள் தங்கள் பெருமையினை உள்ளவாறு விரித்துக் கூறாது குறிப்பிற்புலப்படுமாறு சுருக்கிக் கூறுவர். அயலாராயின் கண்டதுங் கேட்டதுங் கொண்டெழுதுவதன்றி விட்டு விடாது அனைத்தையும் சிறப்புற எழுதும் வாய்ப்பு எய்தப் பெறார்.

அங்ஙனமிலெறி இந்நூலாசிரியர் நூலின்கண் நுவலப்படும் மறைமலையடிகளாரின் மகனாராவர். பெரும் புலமையும் பேரும் வாய்ந்த பெரியார். அவர்களும் ஏனையோர் போன்று கண்டதுங் கேட்டதுங் கூறாது ஆசிரியர் மறைமலையடிகளார் 1899 முதல் 1950 வரை எழுதி வைத்திருந்த நாட்குறிப்பை அடிப்படையாகக் கொண்டு தினையும் வழுவாது செம்முற வரைந்துள்ளார்கள்.

இந்நூல் டிம்மியளவில் ஏறத்தாழத் தொள்ளாயிரம் பக்கங்களையடுத்துள்ளது. அழகிய கட்டடம் அமைந்தது. மறைமலையடிகள் வரலாறெனப் பெயர் பெறினும் தமிழகப் பெரும் புலவர் பலர் வரலாறுகளும் இதன்கண் காணப்படுகின்றன. தமிழ் வரலாறு, தமிழின் மாண்பு, தமிழக வரலாறு முதலிய தனிச் சிறப்புக்களும் வாய்ந்துள்ளன. செந்நெறி மாண்பு, சித்தாந்த சைவச் சீர்மை, அதனைத் தமிழுலகத்தும் வெளியுலகத்தும் பேணி வரும் கழகத் தொகைகள், தொண்டுகள், அடிகளார் தொடர்பு கொண்டுள்ள அரும்பணிகள் முதலிய பலவும் ஈண்டு விளக்கமுறத் திகழ்கின்றன. நூலின் நடை ஆசிரியர் அடிகளார் மகனாராதலின் மிக்க வனப்புடையது. அழகிய வண்ணப்படங்கள் பல ஆங்காங்கு மிளிர்ந்து நூலினை எழில் செய்கின்றன.

இதனைச் செந்தமிழ் அன்பர்களும் செந்நெறிச் செல்வர்களும் இன்றியமையாது வாங்கியும் வாங்குவித்தும் பெரும் பயன் எய்துவார்களாக. எல்லா நூல் நிலயங்களிலும் இந்நூல் இருத்தல் வேண்டுமென்பது சொல்லாமலே அமையும்; என்னை? இதுவே தமிழின் அமிழ்தமாம் உண்மையொன்றாதலின் என்க.

ஜீவபந்து T. S. ஸ்ரீபால் அவர்களின் வாழ்க்கையும் தொண்டும் "மணிவிழா மலர்"

[இம் மலரை மணிவிழாக் குழுவினர் அளித்தனர். இதன் விலை ரூபா. 2 00. கிடைக்குமிடம் 'சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்—அஞ்சற் பெட்டி 85. சென்னை-1.]

இம் மலர் திரு. பாலவர்களின் உயர்ந்த பண்பாட்டையும், சிற்றுயிர்கள் மாட்டுக்கொண்டுள்ள பேரருளின் காரணங்களையும், அது காரணமாக எத்தனையோ இன்னல்களை யடைந்தும் மேற்கொண்டுள்ள தொண்டினை விடாது புரிந்து வரும் சிறப்பினையும், தமிழுக்குத் தனிப்பட ஆற்றும் பணியினையும், சமய நோக்காது தமிழ்ப்புலவர்கள் அனைவர்களோடும் உளங்கலந்து அளவளாவும் அன்பின் பெருக்கையும், பொது நோக்குடைய சங்கங்களில் கலந்து உழைக்கும் உழைப்பினையும், அவர்தம் வரலாற்று விரிவினையும் நன்கு விளக்குகின்றது. பல் பேரறிஞர்களின் ஆராய்ச்சி மிக்க கட்டுரைகளும் வாழ்த்துக்களும் இம் மலரை அணி செய்கின்றன. பல வேறு வகையான சிறந்த வண்ணப் படங்கள் காணப் படுகின்றன. 192 பக்கங்கள் உள்ளன. உயர்ந்த அழகிய பதிப்பு. இதனைச் செந்தமிழன்பர்கள் அனைவர்களும் வாங்கியும் வாங்குவித்தும் நலம் பெறுவார்களாக.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.